பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார்வீதி
176/1, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.
(கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 10 ஞாயிற்றுக்கிழமை (26-08-2001) தொலைபேசி: 3378 ஒலி: 258

### ஐ. தே. கட்சிக்கு தகுந்த பாடம் புகட்ட

# ஜே. வி. பி. யுடன் கூட்டுச் சேர்ந்து

# ஆட்சி அமைக்க ஜனாதிபதி முயற்சி

## ஜனாதிபதி மாளிகையில் பலமணி நேரம் பேச்சு

(நமது அரசியல் நிருபர்)

'தகுதி காண் அரசு'' ஒன்றை அமைப்பது தொடர்பாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும், மக்கள்விடுதலை முன்னணிக்கும் (ஜே. வி. பி) இடையிலான பேச்சுவார்த்தை நேற்று மாலை ஆறு மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தையின்போது ஜே. வி. பியினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் ஆராயப்பட்டன.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல்பொருளாதார நெருக்கடிகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து ஒருவருடகாலத்திற்கு ஸ்திரமுடைய தகுதி காண் அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஜே வி பி விதித்திருந்த நிபந்தனைகள் தொடர்பாக நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

இப் பேச்சு வார்த்தையில் அரசின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநா

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## பொ. ஐ. முன்னணி-ஐ. தே. கட்சி பேச்சுவார்த்தை சுமுகநிலையில்

### 27, 28இல் மீண்டும் தொடரும்

[கொழும்பு]

தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக பொது ஜன ஐக்கியமுன்னணி அரசின் ஆறு அமைச்சர்கள் கொண்ட உயர்மட்டக்குழுவும் ஐக்கிய தேசியக்கட்சியின் நால்வர் கொண்ட குழுவினருக்குமிடையிலான பேச்சுவார்த்தை முற்றுப்பெறாத நிலையில் சுமுகமான சூழ்நிலையில் முடிவுற்றதாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இருகுழுக்களும் கருத்துவெளியிட்டுள்ளன.

நேற்று நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை இரு குழுக்களுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

சுமார் 5 மணிநேரம் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின் பின்னர் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், ஐக்கியதேசியக்கட்சியைச்சேர்ந்த எம். பி. கே. என். சொக்ஸியும் இணைந்து கூட்டறிக்கை

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அவுஸ்ரேலியா

### புலிகள் தரப்பில் உயிரழந்தோர்

[வவுனியா]

கடந்த 4ஆம் திகதி முல்லைத்தீவு கடற்பரப்பில்

## அரசியல் நெருக்கடிக்கு சர்வகட்சி அரசே தீர்வு

### அமைச்சர் இராஜபக்ஷ கடிதம்

(கொழும்பு)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படுவதே சிறந்த வழியாகும். இதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறு அமைச்சர் மஹிந்த இராஜபக்ஷ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மஹிந்த இராஜபக்ஷ ஜனாதிபதிக்கு எழுதியுள்ள அக்கடிதத்தில் அரசுக்குள் தற்போது ஏற்பட்டுள்ள உள்கட்சி பூசல்களைத்தீர்த்து வைப்பதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

(வ)

## 70-வது சரத்தின்படி பாராளுமன்றை மீண்டும் ஒத்திவைக்கும் வாய்ப்புண்டு

(கொழும்பு)

அரசியல் யாப்பின் 70-வது சரத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டாமல் விசேட அறிவித்தல் மூலம் ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டென அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி செப்ரெம்பர் 7ந்திகதி பாராளுமன்றம் கூட்டப்படாமலே விசேட அறிவித்தல் மூலம் ஒத்திவைக்கும் வாய்ப்புகள் தென்படுவதாகவும் இது குறித்துஜனாதிபதி திடீர் முடிவெடுக்கவுள்ளதாகவும் அரசியல்ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(ந)

## அமைச்சர்கள் மூவரும் இணையத் தளத்தின்

## 27, 28இல் மீண்டும் தொடரும்

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக பொது ஜன ஐக்கியமுன்னணி அரசின் ஆறு அமைச்சர்கள் கொண்ட உயர்மட்டக்குழுவும் ஐக்கிய தேசியக்கட்சியின் நால்வர் கொண்ட குழுவினருக்குமிடையிலான பேச்சுவார்த்தை முற்றுப்பெறாக நிலையில் சுமுகமான சூழ்நிலையில் முடிவுற்றதாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இருகுழுக்களும் கருத்துவெளியிட்டுள்ளன.

நேற்று நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை இரு குழுக்களுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது:

சுமார் 5 மணிநேரம் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின் பின்னர் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், ஐக்கியதேசியக்கட்சியைச்சேர்ந்த எம். பி. கே. என். சொக்ஸியும் இணைந்து கூட்டறிக்கை

→ 8ஆம் பக்கம் பார்க்க

(கொழும்பு)

அரசியல் யாப்பின் 70-வது சரத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டாமல் விசேட அறிவித்தல் மூலம் ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டென அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்

இதன்படி செப்ரெம்பர் 7ந்திகதி பாராளுமன்றம் கூட்டப்படாமலே விசேட அறிவித்தல் மூலம் ஒத்திவைக்கும் வாய்ப்புகள் தென்படுவதாகவும் இது குறித்துஜனாதிபதி திடீர் முடிவு வெடுக்கவுள்ளதாகவும் அரசியல்ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந)

## நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அவுஸ்ரேலியா தொடர்ந்தும் ஆதரவு

[கொழும்பு]

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் நோர்வேயெடுத்துவரும் சமாதான முயற்சிகளுக்கு அவுஸ்ரேலியா தனது பூரண ஆதரவை வழங்குமென அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர்தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் அவுஸ்திரேலியாமௌனம் சாதித்து வருவதாக அந்த நாட்டின் செனற்றர் ஒருவர்வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டௌனரிடம் கேட்டபோதே அமைச்சர்இவ்வாறு தெரிவித்துள்ளார்,

இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

→ 8ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் தரப்பில் உயிரழந்தோர்

[வவுனியா]

கடந்த 4ஆம் திகதி முல்லைத்தீவு கடற்பரப்பில் ஏற்பட்ட படகு விபத்தொன்றில, மேஜர் சரமா (ஆறுமுகம் சுந்தரலிங்கம் - மட்டக்களப்பு) என்ற போராளியும் கடந்த 3ம் திகதிஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல ஒன்றில், மேஜர் முல்லைநிலவன்(ஜெயசுந்தரம் நிஷாகரன்) மட்டக்களப்பு மற்றும் வீரவேங்கை விமலன் [சுந்தரலிங்கம், சுதாகரன் -அம்பாறை) ஆகிய போராளிகளும் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். [ந-8]

## அமைச்சர்கள் மூவரும் இணையத் தளத்தின் செய்திக்கு மறுப்பு

(கொழும்பு)

பிரதமர்ரட்ணசிறிவிக்கிரமநாயக்க அலரிமாளிகையில வைத்த தேநீர் விருந்திற்கு அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல் பீரிஸ், எஸ். பி திஸநாயக்கா. மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் செல்லவில்லையென்று இணையத்தளம் வெளியிட்டதாக பத்திரிகைகளில் வந்த செய்திகளை அமைச்சர்கள் மூவரும் மறுத்துள்ளனர்.

இணையத்தளம் வெளியிட்ட செய்தி தொடர்பாக அமைச்சர்ஜி.எல். பீரிஸ் எமது நிருபருக்கு தெரிவிக்கையில்; அரசிறகுள பிளவுகள இருப்பதாக வெளியில் காட்டிக்கொள்வதே இணையத் தளத்தின் வேலை என்றும் அதனை பிரசுரிப்பதே இப் பத்திரிகைகளின் கடமையாக இருப்பதாகவும்தெரிவித்தார், [வ]

## சடலம் கையளிப்பு

(கொழும்பு)

கொக்குத்தொடுவாய் இராணுவ மினிமுகாம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டபோது அவர்களினால் கைப்பற்றப்பட்ட 7 இராணுவத்தினரின் சடலங்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகசர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பேச்சாளர் ஹர்ஷா வன்னியில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம்ஒப்படைக்கப்பட்ட சடலங்கள் நேற்று மாலை படையினரிடம் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (வ)

# போரில் ஈடுபட்டிருப்போருக்காக வாதாட எவரும் பாராளுமன்றம் செல்லத் தேவையில்லை

### எம்.பி.பதவிகளை தூக்கி எறியுமாறு சங்கிலியன் படை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''பாராளுமன்றப் பதவிகளை தூக்கி எறியுங்கள்'' என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரமொன்றை சங்கிலியன் படை நேற்று யாழ். குடாநாடெங்கும் விநியோகித்திருந்தது. இத்துண்டுப்பிரசுரங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய பிரமுகர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது. அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

சிங்களப் பேரினவாதத்தின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு பல வழிகளிலும் பக்கபலமாக நிற்போரே பதவி விலகுங்கள்: பல்லாயிரக்கணக்கான மக்களினதும் போராளிகளினதும் உயிர்த் தியாகங்களாலும் கட்டியெழுப்பப்பட்ட விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுக்கும் துரோகத்தனத்திலிருந்து தூர விலகுங்கள்.

தமிழீழ தாயகத்தின் விடுதலைப்போரை மழுங்கடிக்கும் சிங்கள பேரினவாத கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்தும், கைகோர்த்தும், செயற்பட்டுவரும் அரசியல்வாதிகளை மக்களே அரவணைக்காதீர்கள். தத்தமது பதவிகளை தக்க வைத்துக்கொள்வதற்காக சிங்கள பேரினவாதத்துடன் நட்புப்பாராட்டிக் கொண்டு போராட்டத்தை கொச்சைப்படுத்த இடமளிக்காதீர்கள்:

→ 8ஆம் பக்கம் பார்க்

## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள 37 வயதுடைய சித்திரை 1 ஆம் பாதம் நட்சத்திரமுடைய கொழும்பு நகரில் நிரந்தர அரச தொழில் (SL. T S Class I) புரியும் மணமகனுக்கு 33 வயதுக்குட்பட்ட படித்த மணமகளை தாயார் தேடுகிறார். சகல விபரங்களுடனும் அண்மையில் எடுத்த Photo உடனும் விண்ணப்பிக்கவும். பொருத்த மற்றவை திருப்பியனுப்பப்படும். அனுப்ப வேண்டிய முகவரி MR BAVAN No 521/3 Galle Road, Wellawatte Colombo-06 (3459)

## சுகாதார சேவை

(மல்லாகம்)

கடந்த புதனன்று சுன்னாகம் தெற்கு, சபாபதி முகாமில் நடமாடும் சுகாதார சேவை இடம்பெற்றது. (உ-122)

## சிறார்க்கு பால் வழங்கல்

(மல்லாகம்)

யாழ். மாவட்டத்திலுள்ள முன்பள்ளி பாடசாலைப் பிள்ளைகளின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக தினமும் பால் வழங்கும் திட்டத்தை மேற்கொள்ள வுள்ளதாக வலி தெற்கு பிரதேச தலைவர் க. கமலசேகரம் தெரிவித்தார். (உ-122)

## பூசகர் வீட்டில் திருட்டு

(இணுவில்)

இணுவில் கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகில் பூசகர் ஒருவருடைய வீட்டில் ஆட்கள் இல்லாத சமயம் பெறுமதி மிக்க தங்க நகைகள், ரொக்கப் பணம் என்பன அண்மையில் களவாடப்பட்டுள்ளன. (செ-49)

# வடமராட்சி தெற்கு மேற்கில் 27 இடப்பெயர்ந்தோர் முகாம்கள் விரைவில் புனரமைக்க நடவடிக்கை

(மந்திகை)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசத்தில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புனரமைப்புத் தொடர்பான முழு விபரங்களையும் திரட்டும் வகையில் மேற்படி பிரதேச சபை செயலாளர் எஸ். பசுபதி தலைமையில் ஈ.பி.டி.பி அமைப்பின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் நேரடியாக முகாம்களுக்குச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த வகையில் 27 முகாம்களைச் சேர்ந்த 612 குடிசைகள் புனரமைக்கப்படவுள்ளன

இதேவேளை குடாநாட்டு இடம்பெயர்ந்தோர் முகாம்கள் பலவும் குடியிருப்பதற்கான தகுதியை இழந்து வருவது குறித்தும், எதிர் வரும் மாரி காலத்தில் அதனால் இடம்பெயர்ந்தமக்கள் அனுபவிக்கப் போகும் அவலங்கள் குறித்தும் பொது அமைப்புக்களிடம் அடிக்கடி சுட்டிக் காட்டி வந்தமை குறிப்பிடத் தக்கது. (உ-23)

# தென்மராட்சி மக்களுக்கு நட்டஈடு வழங்கப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

யுத்தத்தினால் இடம் பெயர்ந்த தென்மராட்சி மக்கள் யாழ் மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் தீ அபாய நஷ்டஈட்டுக் கடனுதவியினைப் பெற்று வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை வரையறுக்கப்பட்ட காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தில் ஏற்கனவே வைப்புச் செய்தவர்களுக்கு மட்டுமே இக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறது

சேதமடைந்த வீடுகள் தொடர்பாக வங்கி அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு சிபார்சு செய்ததன் அடிப்படையிலேயே நட்டஈடு வழங்கப்பட்டுவருகிறது.

சேதத்தின் பெறுமதிக்கு ஏற்ப ஆளுக்கு ஆள் நட்டஈட்டுத்தொகை வேறுபடுவதும் குறிப்பிடத்தக்கது

# புத்தளம் பொலிஸாருக்கு தமிழ் மொழிப் பயிற்சி

[புத்தளம்]

புத்தளம் மாவட்டத்தில் உள்ள நான்கு பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் பொலிஸாருக்கு தமிழ்மொழியில் பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்குமாறு புத்தளம் மக்கள் மன்ற இணைச் செயலாளர், அரச கருமமொழி திணைக்கள ஆணையாளர்களுக்குவேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் தமிழ்ப் பொதுமக்கள், அங்கு சிங்களப் பொலிஸரே கடமையில் இருப்பதால் தம் முறைப்பாடுகளைச் செய்வதில் பெரும் இடையூறுகளை அனுபவித்து வருவதைக் கருத்திற் கொண்டு மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது [இ]

## விளக்கமறியல்

[மந்திகை]

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதான வாதரவத்தை இளைஞரான திரு நாவுக்கரசு நீதிராசா பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது. இவரை எதிர் வரும் 12ஆம்திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் அன்னலிங்கம் பிறேம் சங்கர் உத்தரவிட்டார். (உ-23)

## நாளை முக்கிய கூட்டம்

(மந்திகை)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், மற்றும் விளையாட்டுக் கழகங்களிற்கான தலைவர், செயலாளர்களுக்கான கூட்டம் நாளை 27 ஆம் திகதி காலை10 00 மணிக்கு நெல்லியடி ஈ. பி. டி பி கட்சி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக சம்பந்தப்பட்ட கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-23)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/இணுவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று பி.ப 3.30 மணிக்கு கல்லூரியின் கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [க-6]

## இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

(புலோலி)

வடமராட்சி லயன்ஸ்கழகம் நடாத்தும் இலங்கை நிர்வாக சேவைபரீட்சைக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பி.ப3 மணிக்கு புலோலி மெதடிஸ்தமிஷன் தமிழ்கலவன் பாடசாலையில்

## தொடர் சொற்பொழிவு

(இணுவில்)


# ST. JOHN'S COLLEGE, JAFFNA.
# CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.
# ADMISSION-2002

1: பின்வரும் வகுப்புக்களில் வெற்றிடங்கள் உள்ளன. தரம் 1, தரம் 6.

2. அ) விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01-09-2001 முதல் 15-09-2001 வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஆ) எக்காரணம் கொண்டும் 15-09-2001 க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப் படமாட்டாது.


## இராசி பலன்

26. 08 2001

(ஆவணி 10 ஞாயிறு)

அட்டமி மு இ 7.08 வரை

அனுசம் மு இ. 10.00 வரை

ராகுகாலம் 4. 35 - 6.05

நல்ல நேரம் 9 05- 10 35

கோஷ்டாஷ்டமி

**மேடம்**
அமைதிக்குறைவு. வீண் பிரச்சினை, எதிர்ப்பு காரிய தடங்கல்.

**இடபம்**
வாகன வசதி, சுவாரஸ்யம், போசன சுகம், முயற்சி கை கூடும்.

**மிதுனம்**
மன மகிழ்ச்சி, வியாதி குணமடைதல், காரிய அனுகூலம், தொழில் விருத்தி.

**கடகம்**
குடும்பக் கவலை, காரிய தாமதம். பிரயாண இடையூறு. வியாதி.

**சிங்கம்**
உறவினர் மனஸ்தாபம். மனபதற்றம், உஷ்ண வியாதி. முயற்சி தாமதம்.

**கன்னி**
கூட்டு முயற்சி, காரிய நன்மை அந்நியர் சந்திப்பு, தன வரவு,

**துலாம்**
விரதம், பொருள்விரயம், முயற்சி தாமதம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**
சயன சுகம், பொருள் சேர்க்கை, பெரியோர் மதிப்பு, முயற்சி கை கூடும்.

**தனுசு**
சயன சுகக்குறைவு. காரிய தாமதம், மனக்கிலேசம், தன விரயம்.

**மகரம்**
தன வரவு. கீர்த்தி. தெய்வ தரிசனம், நண்பர்கள் சந்திப்பு,

**கும்பம்**
கடின முயற்சி, நல்லசெய்தி, உற்சாகம், முயற்சி கைகூடும்.

**மீனம்**
புதிய திட்டம், பயந்த சுபாவம். உடல் உழைப்பு, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

-வளவன்

**விஷ...**

(7 ம் பக்க தொடர்ச்சி)

றும். ஜூனிலிருந்து வாழ்வில் தடை தடங்கல், அமைந்து பலன் செய்யும்.

**தொழிலாளர்களுக்கு**

தறகாலம் தொழில் வருமான லாபம் நன்மை தரவுள்

1. பின்வரும் வகுப்புக்களில் வெற்றிடங்கள் உள்ளன. தரம் 1, தரம் 6.
2. அ) விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01-09-2001 முதல் 15-09-2001 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 15-09-2001 க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப் படமாட்டாது.
   இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
   ஈ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21-09-2001. அத்திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒரு படிவத்திற்கான கட்டணம ரூபா 30/-
7. வயதெல்லைகள:
   அ) தரம் 1: விண்ணப்பதாரி 01-02-1996 க்கும் 31-01-1997 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் 6: விண்ணப்பதாரி 01-02-1991 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை:
   தரம் 6 வகுப்புக்கு 29-09-2001 காலை 9.00 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.
9. ஏனைய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்களையும் காரியாலயத்தில் இதேநாட்களில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சை மார்கழியில் நடத்தப்படும். விபரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

அதிபர்கள்.

[C/2402]

இக்கூட்டத்தில் பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [க-6]

## தொடர் சொற்பொழிவு

(இணுவில்)

ஏழாலை கழக்கு கேணியடி ஞானவைரவர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு விழாக்காலங்களில் தினமும் மாலை சைவப் புலவர் ஏ. அனுசாந்தன் மகா பாரதம தொடர் சொற்பொழிவாற்றி வருகிறார். (செ-49)

* * *

(இணுவில்)

சிறுப்பிட்டி வடக்கு ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு விழாக்காலங்களில் தினமும் மாலை ''கம்பராமாயணம்'' பற்றி, சிவத்தமிழ் சொல்லழகர் ச. லலீசன் தொடர் சொற்பொழிவாற்றி வருகிறார். [செ-49]

* * *

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அருள் மிகு ஸ்ரீகாளி அம்மன் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு, விழாக் காலங்களில் தினமும் மாலை 7.30 மணி தொடக்கம் 8.30மணி வரை ''தேவிபாகவதம்'' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜ சர்மாவின் தொடர் சொற்பொழிவு இடம் பெற்று வருகிறது. [செ]

## கருத்தரங்கு

(புலோலி)

வடமராட்சி லயன்ஸ்கழகம் நடாத்தும் இலங்கை நிர்வாக சேவைபரீட்சைக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பி.ப3; மணிக்கு புலோலி மெதடிஸ்தமிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் நடத்தப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம் நடராஜசுந்தரம் பிரதேச செயலர், கே.குணராஜா, ஏ குமாரவேல் ஆகியோர் விரிவுரைகளை நடாத்துவார்கள். (செ.52)

-வளவன்

விஷ...

(7ம் பக்க தொடர்ச்சி)

றும். ஜூனிலிருந்து வாழ்வில் தடை தடங்கல், அமைந்து பலன் செய்யும்.

**தொழிலாளர்களுக்கு**

தறகாலம் தொழில் வருமான லாபம் நன்மை தரவுள்ளது; ஜூனிலிருந்து முயற்சிகள் கூடி சமசுகம் இருக்கும்;

**முதியோருக்கு**

தற்காலத்தில் தேகசுக விருத்தி லாபம் உள்ளது. ஆனியிலிருந்து மத்திம சுகம் நிலவும்.

(தொடரும்)


## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மகா கும்பாபிஷேக
# மலர் வெளியீட்டு விழா

27-07-2001 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த இம் மகா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா இன்று 26-08-2001 ஞாயிறு காலை 10.30 மணிக்கு புதிய வசந்த மண்டபத்தில்

ஆலய அறங்காவல் சபைத் தலைவர்
**திரு. இ. அன்னலிங்கம்**
தலைமையில் நடைபெறுகின்றது.

பக்த அடியார்கள் அனைவரையும் விழாவிற்கு வருகை தந்து விழாவை சிறப்பித்து மகா கும்பாபிஷேக மலரையும் அருட்பிரசாதத்தையும் பெற்று எம் பெருமான் அருள பெற்று ஏகுமாறு வேண்டுகின்றோம்;

மலர்க் குழு
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில்

துன்னாலை வடக்கு,
புலோலி.

[C/2426]

# விடுதலைப்புலிகளின் அடுத்த இலக்கு

# காரைநகர் கடற்படைத் தளம்?

## எதிர் கொள்ளும் வகையில் நடவடிக்கை

(வடமராட்சி கிழக்கு)

விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொள்ளலாம் எனும் அச்சம் காரணமாக காரைநகர் கடற்படைத் தளத்தில் கடற்படைக் கலங்கள் எவையும் இரவு நேரத்தில் தரித்து நிற்பதில்லை என தெரியவந்துள்ளது.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் புலிகளால் தாக்கப்பட்டதையடுத்து அவர்களின் பார்வை முக்கிய கடற்படைத் தளங்கள் மற்றும் கேந்திர நிலையங்கள் மீது விழுந்திருப்பதாக புலனாய்வுத்துறையினர் விடுத்துவரும் எச்சரிக்கையில் பின்னணியிலேயே காரைநகர் கடற்படைத்தளத்தில இவ்வாறு புலிகளின் தாக்குதலில் இருந்து தப்பும் வழிமுறைகள் கையாளப்படுவதாகவும்,

இதனையடுத்து கடற்படைக் கலங்கள் தற்போது காங்கேசன் துறை முகத்திலேயே இரவு நேரங்களில் தரித்து நிற்பதாகவும் அறியக் கிடக்கிறது.

கடந்த 1952 ஆம் வருடம் அமைக்கப்பட்ட காரைநகர் கடற்படைத்தளம் வடக்கு கடற்படையினரின் உயிர் நாடியாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-43)

# இலவச மூக்குக்கண்ணாடி 208பேர் பெறுவர்

(புலோலி)

பருத்தித்துறை நகரப் பகுதியில் இடம்பெற்ற கண் வைத்திய சிகிச்சை முகாமில் 208 பேருக்கு கண்ணாடிகள் வழங்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி கே. மயிலேறும்பெருமாள் தனது தாயார் அமரர் இளையாச்சியினதும் மாமனார் அமரர் மாணிக்கத்தினதும் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்துடன் இணைந்து பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடத்திய இலவச கண் பரிசோதனை முகாமிலேயே இவ்வாறு 208 பேரும் கண்ணாடி பெறுவதற்கான சிபார்சைப் பெற்றுள்ளனர்.

கொழும்பிலிருந்து கண்ணாடிகள் வந்து சேர்ந்ததும் இந்த 208பேருக்கும் இலவசமாகக் கண்ணாடி வழங்கப்படவுள்ளன. (உ)

# ஆயிரத்து 100 கைதிகள் விரைவில் விடுதலையாவர்

(கொழும்பு)

ஆயிரத்து 100 சிறைக் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாக இலங்கை சிறைச்சாலை ஆணையாளர் உபாலி சமரவீர தெரிவித்துள்ளார்:

சிறு குற்றங்கள் மற்றும் தண்டப் பணம் செலுத்தத் தவறியமை ஆகியவற்றுக்காக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இதற்கான ஆணையை நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் பிறப்பித்துள்ளார். (உ-4)

# கோதுமை மாவை பதுக்கி வைத்தால் தண்டனை விதிக்கப்படும்

(கொழும்பு)

கோதுமை மாவைப் பதுக்கி வைத்திருப்பவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உள் நாட்டு வர்த்தக ஆணையாளர் திணைக்களம் எச்சரிக்கை செய்துள்ளது.

வர்த்தகர்கள் மாவை விலை கூட்டி விற்பதற்காகப் பதுக்கி வைத்திருக்கின்றார்கள் என தகவல் கிடைத்தனாலேயே மேற்படி திணைக்களம் இந்தஎச்சரிக்கையை விடுத்துள்ளது.

மாவைப் பதுக்கி வைத்து விற்பனை செய்வோரையும், கூடுதல் விலைக்கு விற்பனை செய்வோரையும் கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார். (செ)

# அனலைதீவு வடக்கில் கிராம அபிவிருத்தி சங்கம் அங்குரார்ப்பணம்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறைப் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேந்திரா தலைமையில் இடம் பெற்ற மேற்படி அங்குரார்ப்பண நிகழ்வில்,

தலைவராக ச. சிவராஜா, உபதலைவராக வி. சபாரத்தினம், செயலாளராக வீ. கனகசபாபதி, உப செயலாளராக வை பூலோக சுந்தரம் பொருளாளராக இ இராசேந்திரம் ஆகியோருடன் 7 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். உ75)

# பேரூட் நிறுவன ஆதரவுடன் அடிப்படை சுகாதார பயிற்சி

[ஊர்காவற்றுறை]

பேரூட்நிறுவனத்தின் ஆதரவுடன் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் அடிப்படைச் சுகாதாரப் பயிற்சி வகுப்பு அண்மையில் நடத்தப்பட்டது.

கிராம சுகாதார உதவியாளர், சுகாதாரத் தொண்டர்கள், பேரூட் செயற்றிட்டத் தொண்டர்கள் ஆகியோர் இந்த அடிப்படைச்சுகாதாரப் பயிற்சியில் பங்கு கொண்டனர்;

தொடர்ந்து 5 தினங்கள் இடம்பெற்ற இவ் வகுப்பில் 30 வரையானோர் பங்கு பற்றி பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

# இலவச மருத்துவ முகாம்

[அரியாலை]

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் இலவச பொது மருத்துவ முகாம் இன்று காலை 8 00மணிமுதல்மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இங்கு நீரிழிவுப் பரிசோதனையும் நடத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-106)

## நூல் விநியோகம்

(புலோலி)

விநாயகப் பெருமானை போற்றிப் பாடப் பட்ட பாடல்களைக் கொண்ட 'காரிய சித்திமாலை' எனும் சிறு நூல்தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில விநாயகசதுர்த்தி தினத்தன்று இலவசமாகப் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம் இதனை அச்சிட்டு விநாயக சதுர்த்தியை முன்னிட்டு இலவசமாக வழங்கியது. (செ-52)

## துவிச்சக்கர வண்டி

# திருட்டு

(யாழ்பபாணம்)

யாழ். நீதி மன்றிற்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி ஒன்று நேற்று முன் தினம் களவாடப்பட்டுளளது;

வழக்கு விசாரணையின் பொருட்டு, துவிச்சக்கர வண்டியை நிறுத்தி விட்டு சென்றவேளையே காணாமற் போயுள்ளதாகவும், இது பற்றி யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-6)

# கரவெட்டிப் பகுதியில் மீண்டும் கள்வர் நடமாட்டம்

(துன்னாலை)

கரவெட்டிப் பகுதியில் திருடர் கொட்டம் மீண்டும்தலை தூக்குவதாக அப்பகுதிமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன் அப்பகுதியில் கட்டுப்படுத்துவாரின்றி களவுச் செயல்கள் மிதந்து காணப்பட்டதையடுத்து கரவெட்டிப்பிரதேச கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிரமாகச் செயற்பட்டு வந்தால் திருடர் தொல்லை இல்லை என்னும் அளவிற்கு நிலை காணப்பட்டது.

இருப்பினும், தற்போது விழிப்புக்குழுக்கள் தமது செயற்பாடுகளில் தளர்ச்சிப் போக்கைக் கடைப்பிடிப்பதால் கள்வர் செயல் நாளுக்கு நாள் வளர்ச்சிப் போக்கில் செல்வதாக பாதிக்கப்படும் பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-41)

## யாழ்ப்பாணம், திருமலை

# உயர் நீதிமன்றங்கள் புனரமைக்கப்படும்

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(வவுனியா

யாழ்ப்பாணம், திருமலை மாவட்ட உயர்நீதி மன்றங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் விரைவில் புனரமைப்புச் செய்யப்படும் என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அண்மையில் உயர் நீதிமன்றக் கட்டடத்தை திறந்துவைத்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட நீதிபதி எம் இளஞ்செழியன், தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் வவுனியா அரச அதிபர் கே. கணேஷ், மன்னார், அநுராதபுர நீதிவான்கள உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ)

## பரு. நோக்கிச் சென்ற பேருந்தில்

# பயணித்த பெண்ணின் பணம், நகை, மாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைநோக்கிசென்று கொண்டிருந்த பேருந்தில் பயணித்த பெண்ணின் பெறுமதிமிக்க உடைமைகள கையாடப்பட்டுள்ளன;

நேற்று முன்தினம் பிற்பகல் வேளை இடம்பெற்ற இச் சம்பவத்தில், 25 ஆயிரம் ரூபா பணம், மற்றும 8 பவுண் நகை என்பன கைப்பையில வைக்கப்பட்டிருந்த நிலையில் களவு போயுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து மேற்படிபேருந்தில் பயணித்த பெண், இடை வழியில் தனது பொருட்கள் பத்திரமாக இருக்கின்றனவா எனப் பார்த்த போது அவை மாயமாய் மறைந்து விட்டதை அறிய முடிந்தது.

இது தொடர்பாக புத்தூர் சோதனைச்சாவடியில் முறையிட்டதையடுத்து சம்பந்தப்பட்ட பேருந்து உட்பட வேறும் சில பேருந்துகள், சிற்றூர்திகளை படையினர் நீண்ட நேரமாகத் தடுத்து வைத்துச் சலலடை போட்டுத் தேடியும காணமற் போன உடைமைகள் மீட்கப்படவில்லை என தெரியவந்துள்ளது. (உ-41)

# இலங்கையில் முன் அனுமதிபெற்றே எப்பகுதிக்கும் செல்ல வேண்டும்

## அதிகாரிகள், ஊழியருக்கு ஐ. நா. அறிவுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் எந்தப் பகுதிக்குச் செல்வதானாலும் முன் அனுமதி பெற்றேசெல்ல வேண்டும் என ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தனது சகல அதிகாரிகள், ஊழியர்கள், அலுவலர்களுக்குப் பணித்துள்ளது:

கடந்த 20ஆம் திகதி முதல் இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வந்துள்ளது.

ஐ.நா,வின் பாதுகாப்பு விவகார இணைப்பதிகாரி ஐ.நா.வின்சகல முகவர்நிலையங்களுக்கும் விடுத்துள்ள இப் பணிப்புரையில்,

இலங்கையிலுள்ள பாதுகாப்புமுகாமைத்துவக் குழுவுடன்மேற்கொண்டகலந்தாலோசனையின்அடிப்படையில் குறித்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகவும்,

பாதுகாப்பு நிலைவரத்தைக் கருதியே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், வட பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை மூன்றாம் கட்டத்தில் இருந்து நான்காம் கட்டத்திற்கு மாற்றியுள்ளதாகவும் முகவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்குபயணம்செய்ய விரும்புவோர் அதற்கான பாதுகாப்பு முன்அனுமதியை 2வாரங்களுக்கு முன்பாக கொழும்பில் உள்ள யுனிசெவ் நடவடிக்கை அதிகாரி பிரேம் சுபாவிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# கடற்படை அதிகாரிகள்

## மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பு

[மந்திகை]

கடற்படை அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோருடன் வடமராட்சி மீனவர் சங்கப் பிரதி நிதிகளின் சந்திப்பு கடந்த வியாழனன்று வல்வெட்டித்துறை சிவில் நிர்வாகஅலுவலகத்தில் இடம் பெற்றது.

வடமராட்சிக் கடலில், மீனவர் மீதான கடற்படையினரின் அத்து மீறல் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து சம்பந்தப்பட்ட பகுதி இராணுவ அதிகாரிக்கு மீனவர்கள் முறைப்பாடு செய்ததை அடுத்தே இச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தகடற்படை உயர் அதிகாரி மீனவர்களுடன் அடாவடித்தனமாக நடந்து கொண்ட கடற்படை வீரர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததுடன் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாது எனவும் உத்தரவாதமளித்தார். [உ-23]

# நாய்களுக்கு ஒருவிதநோய்

(இணுவில்)

உடுவில், சுன்னாகம் பகுதிகளில்நாய்கள் ஒருவித நோயின் காரணமாக இறப்ப தாக கால்நடை வைத்திய நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (செ-9)

# ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்குள்

# புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிடுவர்

## புறொன்றலைன் சஞ்சிகையில் கலாநிதி றொகான்

[கொழும்பு]

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பதவிக்காலம் முடிவடைவதற்குள் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிடுவர்.

இவ்வாறு தீவிரவாதம் மற்றும் அரசியல் வன்முறை பற்றி ஆராய்வு செய்யும் நிபுணர் கலாநிதி றொகான் குணரட்ண புறொன்றலைன் சஞ்சிகையில் எழுதிய தனது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வுபெற முன்னர் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடுவர். ஏனெனில் அவர்களுடைய பலம் அதிகரித்துச் செல்வதுடன் அவர்களது புலனாய்வுப் பிரிவினரின் வளர்ச்சியும் அபரிமிதமாகவுள்ளது.

அத்துடன் அரசாங்க புலனாய்வுப் பிரிவினரின் பலவீனம் மற்றும் அரசியல் நியமனங்கள் விடுதலைப்புலிகள் யாழ். குடாவைக் கைப்பற்ற வசதியாகவே உள்ளன.

தரைப்படை, கடற்படை, வான்படை மற்றும் பாலிஸ் படை உளவுப்பிரிவின் அனைத்திலும் விடுதலைப்புலிகளின் உளவாளிகள், ஆதரவாளர்கள் ஊடுருவி ஒன்றாகக் கலந்துள்ளனர். இதனால் முப்படை மற்றும் பொலிஸ் உளவுப் பிரிவு ஆகியவற்றினால் எவ்வித பாதுகாப்பு நடவடிக்கைகளையும் சிறப்பாக மேற்கொள்ள முடியாதுள்ளது.

விடுதலைப்புலிகள் தனது மொத்தச் செலவினத்தில் 40 சதவீதத்தை சிவிலியன்கள் பற்றியும் உளவு நிறுவனங்கள் பற்றியும் அறிந்துகொள்ளவே செலவிடுகின்றனர்.

ஆனால் இவ்விடயத்தில் அரச தரப்பு மிகவும் பலவீனமாகவே உள்ளது.

நாட்டின் பாதுகாப்புத் துறையில் அரசியல் செல்வாக்கினால் நியமனங்கள் வழங்கப்படுவதாலேயே அரச புலனாய்வு மற்றும் பாதுகாப்புத் துறையில் பல வீனங்கள் காணப்படுகின்றன.

அரசியல் செல்வாக்கினால் திறமையான அதிகாரிகள் பலர் பழிவாங்கப்படுகின்றனர். இதனாலும் பாதுகாப்புத்துறையில் பலவீனம் அதிகரித்துள்ளதாக அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## கைவிடப்பட்ட நிலையில் மூன்று மாத பெண் குழந்தை

(மந்திகை)

பெற்றோரினால் கைவிடப்பட்ட மூன்று மாதப்பெண் குழந்தை ஒன்று பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் வைத்து பராமரிக்கப்பட்டு வருவதாக வைத்திய சாலைவட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

கடந்த மூன்று மாதங்களாக மேற்படி வைத்திய சாலையில் பராமரிக்கப்பட்டு வரும் இப் பெண்குழந்தையை தத்தெடுத்து வளர்க்க விரும்புபவர்கள் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்திய சாலை, மாவட்ட வைத்திய அதிகாரி என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

[க-23]

## நல்விளைச்சலை தரவல்ல கௌபிஇனங்கள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் அதிவிளைச்சலைத் தரக்கூடிய 5 புதிய கௌபி இனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பொறுப்பதிகாரி திருமதி எஸ்.விஜயரட்ணம் தெரிவித்தார்.

வருணி, விஜயா, பெம்போகபில், எம். ஐ- 35, தவளா ஆகியமேற்படி இனங்கள்குடாநாட்டு கால நிலையில்நல்விளைச்சலைத் தரக்கூடியன எனவும், இப் புதிய இனங்கள் அடுத்த சிறுபோக செய்கைக் காலத்தில் விவசாயிகள் மத்தியில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும்,

விவசாய நிலங்களில் இன இசைவாக்கப் பரிசோதனை செய்து காட்டப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-6)

## இடம்பெயர்ந்த மக்களின் கடிதங்கள் தபாலகத்தில் தேக்கம்

(செம்பியன்பற்று)

இடம்பெயர்ந்து புலோலி உபயகதிர்காமம் பகுதியில் இயங்கி வரும் தாளையடி உப அஞ்சல் அலுவலகத்தில் உள்ளூர் தபால்கள் பல உரியவர்களிடம் சேர்ப்பிக்கப்படாமல் தேங்கிக் கிடப்பதாக தெரியவந்துள்ளது.

உடுத்துறை, ஆழியவளை, மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி பிரதேச மக்களுக்கு வந்த தபால்களே இவ்வாறு நீண்ட காலமாகஇருப்பதாகவும்,

உரியவர்கள் பெற்றுக் கொள்ளத் தவறுமிடத்து திருப்பியனுப்பப்படும் எனவும்உபதபால் அதிபர் செல்வி சுதா அறிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-42)

## விருந்துண்ணச் சென்றோர்க்கு விஷமருந்து கலந்த உணவு

## துன்னாலையில் சம்பவம்

(மந்திகை)

விருந்தென்று அழைத்து விஷமருந்து கலந்து குளிர்பானம் கொடுத்த சம்பவம் ஒன்று அண்மையில் துன்னாலைப பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீட்டாரின் அனுமதியின்றி மனமொப்பிதிருமணம் புரிந்த இளம் தம்பதிகள் இவ்வாறு உறவினர்களால் விருந்துக்கு அழைக்கப்பட்டு குளிர்பானத்துடன் நஞ்சுத் திரவம் கலந்து கொடுக்கப்பட்டதால் மயக்கமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-23)

## நிவாரண விநியோகத்தில் விரைவில் வெட்டு

### அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்காவில் ஏற்படுத்தப்பட்ட பாரிய அழிவின் பின்விளைவாகஇங்குவிநியோகிக்கப்படும் நிவாரணங்களில் கூட வெட்டு விழக்கூடும் இவ்வாறுஅமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு மற்றும் மானிப்பாய் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறுகையில்; பொதுவாக நிவாரணங்கள் அரசாங்கத்தினால் ஆறு மாத காலத்திற்கு வழங்கப்படுவதே வழமை. ஆனால் தீவுப்பகுதியில் கடந்த 10வருடத்திற்கு மேலாகவும், குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் 6 வருடங்களாகவும் நிவாரண விநியோகம் நீடிக்கின்றது. குடாநாட்டில் சுமார் ஒரு லட்சத்து இரண்டாயிரம் குடும்பங்கள் தற்போது நிவாரணம் பெறுகின்றன.

இவ்வாறான நிவாரணவிநியோகத்திற்கு ஈ. பி. டி. பி அமைப்பேபிரதானகாரணம். எமக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலானஉறவின் வெளிப்பாடாக இது இடம் பெறுகிறது ஆனால் நாசகார செயற்பாடுகளால் அழிவுகளை தொடர்ந்து பொருளாதார நெருக்கடிகள் தீவிரமடையுமானால் நிவாரண விநியோகத்தில் வெட்டு விழுவதை நாங்கள் தடுக்க முடியாது போகலாம்.

இனரீதியானபாகுபாட்டின் வெளிப்பாட்டினை அல்லது ஒடுக்குமுறையின் வடிவமாக நிவாரண வெட்டு அமுலுக்கு வருமானால்அதனைஎதிர்த்து நாங்கள் போராட முடியும்; ஆனால் பொருளாதார நெருக்கடியின் விளைவாக வருமானால் தடுக்கமுடியாது போகலாம் எனக் குறிப்பிட்டார்.

இங்கு கலந்துகொண்டவர்கள மத்தியிலிருந்து கருத்து தெரிவிக்கப்படுகையில் குடாநாட்டில் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படுவதுஅவசியம் எனினும் தன்மானத்தை இழப்பதாக அது அமையக்கூடாது எனக் குறிப்பிட்டார்.

(க)

## அனலைதீவில் மூவாயிரம் தென்னைகளுக்கு மைற்ஸ் மருந்து தெளிப்பு

(ஊர்காவற்றுறை)

அனலைதீவில் சுமார் மூவாயிரம் தென்னைகளுக்கு மைற்ஸ் நோயைக் கட்டுப்படுத்தும் மருந்துஇற்றைவரை தெளிககப்பட்டுள்ளது.

இம்மருந்து தெளிக்கும் நடவடிக்கையை தென்னைப் பயிர்ச்செய்கை அபிவிருத்திச் சபையின் யாழ். அலுவலகத்தின் வழிகாட்டலில் அனலைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை, மேற்படி நோய்த்தாக்கத்தை முற்றாகக் கட்டுப்படுத்தும் வரை மருந்து தெளிக்கும் பணி தொடரும் என அனலைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.பரத்துவாசன் தெரிவித்தார்.

(உ-75)

## மோட்டார் வாகன காப்புறுதி செய்வோர் தொகை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில், மோட்டார் வாகனக் காப்புறுதி மேற்கொள்பவர்களின் தொகை அண்மைக் காலத்தில் கணிசமாக அதிகரித்துள்ளதாகக் கூட்டுத்தாபனப் புள்ளி விபரங்கள் மூலம் அறிய முன்வந்துள்ளது.

யாழ். குடாநாட்டில் வீதிப் போக்குவரத்து கண்காணிப்புப் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டதை அடுத்தும், மோட்டார் வாகனங்களின் பாவனை அதிகரித்திருப்பதையடுத்துமே இவ்வாறு உயர்வடைந்திருப்பது தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு 9 ஆயிரத்து 216 பேர் இவ்வாறு பதிவு மேற்கொண்டிருப்பதாகவும் இவ் வாண்டு அரைவாசிப் பகுதியில் 9 ஆயிரத்து 996 பேர் வாகன காப்புறுதி செய்திருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதே வேளை, ஆண்டு தோறும் காப்புறுதி புதுப்பித்தல் நடவடிக்கையினை காலாவதியாகும் தினத்துக்கு முன் மேற்கொள்வதன் மூலம் சிரமங்களை தவிர்க்க இயலும் எனக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(உ-6)

## பஸ்சேவை விஸ்தரிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கியதான காலை நேரப் பேருந்துச் சேவையில் மேலும் ஒரு பேருந்து இணைக்கப்பட்டுள்ளது.

மேற்படி புதிய பேருந்துச் சேவையானது காலை 6.00 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து புறப்பட்டு 780 ஆம் இலக்கப் பாதையூடாக இச் சேவை இடம்பெறும்.

புளியங்கூடல் ஊடாக இடம்பெறும் இச்சேவைமூலம் பொது மக்கள், நோயாளர், மாணவர்கள் ஆகியோர்பயன் பெற்று வருகின்றனர்.

(உ-75)

## சிவாஜியின் நினைவு நாள்

[யாழ்ப்பாணம்]

மறைந்த நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் 31 ஆம் நாள் நினைவு தின நிகழ்வுகள் அண்மையில் சாந்தையில் அப்பகுதி வாழ் மக்களால் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது.

அன்றைய தினம் சிவாஜி ரசிகர்களால் நூற்றுக்கணக்கானோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

(உ-104)

## அஸிட் வீச்சு

(கொழும்பு)

கணவர் மீது அஸிட் வீசிக் காயப்படுத்திய 4 பிள்ளைகளின் தாய் ஒருவரை புலத்சிங்கள பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கணவரின் தொல்லை தாங்காமலே மேற்படி பெண் அவர் மீது அஸிட் வீசியதாக தெரிய வந்துள்ளது.

(உ)

## வயோதிபர் இல்லத்தில் சேவை

(யாழ்ப்பாணம்)

யா/பகவான்ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலைய சேவைப் பிரிவினர் இன்று மூளாயில் அமைந்துள்ள வயோதிபர் இல்லத்தில் சேவை மேற்கொள்ளவுள்ளனர்.

இதில் கலந்து கொள்ள விரும்பும் நிலைய உறுப்பினர்களை நண்பகல் சமுகமளிக்குமாறு நிலைய சேவைப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

(உ- 104)

## துவிச்சக்கர வண்டி தரிப்பிடம்

(மல்லாகம்)

சுன்னாகம் நூல் நிலையத்திற்கு நீண்ட நாட்களுக்கு பின் துவிச்சக்கர வண்டிகள் தரிப்பிடம் அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியாகி உள்ளது.

மேற்படி, தரிப்பிடக் கட்டடத்தை, நேற்றுக் காலை திறந்து வாசகர்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-122)

## குடிநீர் விநியோகம்

(புலோலி)

பருத்தித்துறை நகர சபையின் குடிநீர் விநியோகத்திட்டத்தை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை நகரசபை மேற்கொண்டுள்ளது.

தற்போது பருத்தித்துறை நகர கரையோரப்பகுதி மக்களுக்கு நகரசபை பௌசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் இப்பகுதிகளில் குடிதண்ணீர்த் தொட்டிகள் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு குடிநீர் வழங்கப்படவுள்ளது.

(உ-52)

## இன்று ஒரு தகவல்

# நீங்களும் இடம்பெறலாம்

ஒரு தேசிய விளம்பர நிறுவனத்தின் தலைவராக நான் இருந்திருக்கிறேன். பொது ஜனத் தொடர்பு நிறுவனத்தின் தலைவராகவும் இருந்திருக்கின்றேன். ஆகவே ஒருவரின் செல்வாக்கு அமைப்பினை எப்படிப் பலப்படுத்திக் கொள்வது என்பதைப் பற்றி, அனுபவத்தில் நான் தெரிந்து கொண்ட ஒருவழிமுறையினைச் சொல்லப் போகிறேன். பொது மக்களுக்கு இது தெரிந்திருக்க நியாயமில்லை. உங்கள் ஸ்தாபனத்தைப் பற்றியோ, உங்கள் குழுவின் ஏனைய தலைவர்களைப் பற்றியோ நீங்கள் பேசும் போது எல்லாம் 'நாம்' என்கிற சொல்லையே பயன் படுத்த வேண்டும். இது பயன்தர வேண்டுமானால் ஓரளவுக்காவது முக்கியத்துவம் பெற்றவராக நீங்கள் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த முயற்சி கேலிக்கூத்தாகிவிடும்.

இதுபற்றி சில எடுத்துக்காட்டுகளை நான் குறிப்பிடப்போகிறேன். எங்களுடைய விளம்பர, பொது ஜனத் தொடர்பு வேலைகளில் எங்களுக்கு வாடிக்கையாளர்கள் நிறையப்பேர் உண்டு. ஆரம்பத்தில் அவர்கள் தங்களுடைய அமைப்புகளில் தலைவர்கள் என்று கருதப்படுகிற நிலைமையில் இருக்கமாட்டார்கள். ஆகவே, விளம்பரத்துறைகளில் அவர்களுடைய பெயர் ஒரு குறிப்பிட்ட நிலை வரையில் தான் இடம்பெற்று இருக்கும். மேல் நிலையில் இடம்பெறும் தகுதியை ஏதோ ஒரு விதத்தில் அவர்கள் பெறுகின்றவரை அதே நிலையில்தான் அவர்கள் இருப்பார்கள்.

ஒரு விளம்பரச் செய்தியை வெளியிடுகின்ற போது அவர்களும் இடம்பெறத்தக்க விதத்தில் 'நாம்' என்கிற சொல்லைப் பயன்படுத்துகிற போது அவர்களுக்கும் ஒரு முக்கியத்துவம் ஏற்படுகின்றது. பெற்றோர்களாகிய நாம், வரிகொடுக்கிறவர்களாகிய நாம், பட்டதாரிகளாகிய நாம், என்றெல்லாம் சொல்லுகின்றபோது, சம்பந்தப்பட்ட அனைவரும் ஓர் அமைப்பில் தாங்களும் பங்கு பெற்று இருக்கின்ற உணர்ச்சியைப் பெறுகின்றார்கள். இந்த மனோதத்துவ உண்மையினை வாழ்க்கை வெற்றிக்கு ஒவ்வொருவருமே பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள ஒன்றில் இடம்பெறுகின்ற போது, உங்களின் செல்வாக்கு அமைப்பு வளர்ச்சி அடைகிறது பலம் பெறுகிறது. மற்றவர்கள் உங்களுக்கு மரியாதை கொடுக்கத் தொடங்குகிறார்கள். மற்றவர்கள் உங்களை எப்படி நடத்தவேண்டும் என்பதை உங்களுடைய செல்வாக்கு அமைப்பு தீர்மானிக்கும் நிலையைப் பெற்றுவிடுகிறது.

எதிலும் நீங்களும் ஓர் அங்கமாக இடம்பெறுகிற சுய முக்கியத்துவத்தை உங்களால் ஏற்படுத்திக் கொள்ள முடியும். அதன் பலனும் உங்களுக்குச் சாதகமானதாக இருக்கும். எதில் உங்கள் பெருமை அதிகரிக்கிறதோ அந்தக்குழுக்களிலெல்லாம் இடம்பெறுகின்ற முயற்சியினைத் தொடர்ந்து மேற்கொள்ளுங்கள். மன ஈடுபாட்டுடன் அதைச் செய்யுங்கள். நன்றாகச் செய்யுங்கள். உங்களின் செல்வாக்கு அமைப்பு மெய்யானதாக அமையும். உங்களுக்கென்றும் தனியான சௌரவம் ஏற்பட்டுவிடும்

டாக்டர் எம்.ஆர்.காம்மேயர்

# குத்துச் சண்டைப் போட்டி யாழில் நால்வர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட குத்துச் சண்டைப் போட்டிகளில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து நான்கு பேர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கரவெட்டி சிலம்பயாழி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இவ் வீரர்கள் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் அனுசரணையுடன் தேசியமட்டப் போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

நீண்ட காலத்தின் பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தேசியமட்ட குத்துச் சண்டைப் போட்டியில் பங்கேற்க குத்துச்சண்டை வீரர்கள்செல்வது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# சித்தமருத்துவத்துறையில் சித்தியடைந்தவர்களுக்கு 1 வருடகால பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடத்தில் இறுதி வருடப் பரீட்சையில் சித்தியடைந்த பதினொரு மாணவர்கள் கடந்த 15 ஆம் திகதி முதல் தமது உள்ளகப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் யாழ். மாநகர சபை சித்தவைத்தியசாலை, கைதடி சித்த ஆயுள்வேத போதனாவைத்தியசாலை மற்றும் பொறளை சித்த ஆயுர் வேதப்போதனாவைத்தியசாலைஆகிய வைத்தியசாலைகளில் தமது பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பயிற்சி நெறி ஒருவருடகாலம் நடைபெறவுள்ளது. (செ-9)

# நியாயம் கேட்டவர் கத்தி வெட்டுக்காளானார்

(மந்திகை)

சகோதரனின் மகள் அயலவர்களால் தண்டிக்கப்பட்ட சமயம் நியாயம் கேட்க முற்பட்டவர் பாளைக் கத்தி வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

அல்வாய் கிழக்கில் கடந்த வியாழனன்று இச் சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த இராசையா கிருஷ்ணமூர்த்தி [வயது 28] என்பவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (உ-23)

## சித்த சுயாதீனமற்றவர்களுக்கு

# நேரில் சென்று போதனை வழங்க வடக்கு-கிழக்கில் ஆசிரியர் நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் யுத்தத்தின் காரணமாக சித்த சுயாதீனமற்றவர்களாக இருக்கும் இளைஞர், யுவதிகள், குழந்தைகளுக்கு புனர்வாழ்வளிக்கும் நோக்குடன் சுமார் 40 போதனாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொது அமைப்புக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட போதனாசிரியர்களுக்கான பதவி வழங்கும் வைபவம் கடந்த வெள்ளியன்று மாரவில டொல்பின் ஹோட்டலில் நடைபெற்றது.

இன விவகார தேசிய நல்லிணக்க அமைச்சு இவர்களுக்கான கருத்தரங்குகளை நடத்த லண்டன் பல்கலைக்கழகத்தில் இருந்து உளவியல் நிபுணர்களை அழைத்துள்ளது.

தெரிவுசெய்யப்பட்டபோதனாசிரியர்கள்வடக்கு-கிழக்கில் சித்த சுயாதீனமற்றவர்களின் வீடுகளுக்குச் சென்று போதனைகளை வழங்கவுள்ளனர். (உ)

## இரசாயன ஆயுத விவகாரம்

# பத்திரிகை மீது விசாரணை நடத்த இராணுவத் தளபதி வேண்டுகோள்

(கொழும்பு)

இரசாயன ஆயுதக் கொள்வனவில் ஊழல் இடம்பெற்றிருப்பதாக தெரிவித்து சண்டே லீடர் பத்திரிகையில் வெளியான கட்டுரை தொடர்பாக, விசாரணை மேற்கொண்டு உண்மை நிலையை வெளியிடுமாறு, ஊழல் மற்றும் இலஞ்சத் தடுப்பு விசாரணை ஆணைக்குழுத் தலைவருக்கு, இராணுவத் தளபதி லெப்ரினன்ற்ஜெனரல்லயனல் பலகல்லே கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி இராணுவத் தளபதி பலகல்லேயால் ஊழல் இலஞ்சத்தடுப்பு ஆணைக்குழுத் தலைவருக்கு எழுதப்பட்ட கடிதத்தில்,

இரசாயன ஆயுதக் கொள்வனவில் ஊழல் நடைபெற்றதாக பிரஸ்தாப பத்திரிகையில் வெளியான கட்டுரை தொடர்பாக அப்பத்திரிகையின் ஆசிரியர், பத்திரிகை வெளியீட்டாளர் மற்றும் கட்டுரையை எழுதியவர் ஆகியோரை விசாரித்து உண்மை நிலையை வெளிப்படுத்துவதுடன் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதே வேளை, அக்கடிதத்தில் சண்டேலீடர் பத்திரிகை வெளியிட்ட கட்டுரையையும், கட்டுரைக்கான தனது விளக்கத்தையும் லயனல் பலகல்லே இணைத்து அனுப்பியுள்ளார். (இ)

## பாடசாலை மாணவரை

# இலக்கு வைத்து போதைப் பொருள் இலவச அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையில பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு போதைப்பொருட்கள இலவசமாக அறிமுகம் செய்யப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆரம்பத்தில் இலவசமாக அவற்றை மாணவர்கள் மத்தியில் விநியோகித்து அவர்களை அதற்கு அடிமையாக்குவதாகவும்.

பின் அவர்கள் போதைப் பொருளை வாங்கும் பணத்திற்காகவோ அல்லது அதனைப் பாவிப்பதனாலோ பல்வேறு சமூகச் சீரழிவுகளில் இறங்கி விடுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ)

## நிலாவரைக் கிணற்றை

# நீர்ப்பாசனத்திற்குப் பாவிப்பது பற்றி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

கமநல சேவை உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடையே யாழ். அமைச்சு அலுவலகத்தில் அண்மையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

பயன் தரு மரங்கள் வளர்ப்பை ஊக்குவித்தல், உள்ளூர் உற்பத்திகளுக்குச் சந்தை வாய்ப்பை விரிவுபடுத்துதல் ஆகியன தொடர்பாக அங்கு ஆராயப்பட்டது.

பேராசிரியா பொ.பாலசுந்தரம்பிள்ளை இச் சந்திப்பில் கருத்து கூறுகையில், நெற்காணிகளில அறுவடை முடிந்த பின்னர் எள்ளுச் செய்கை செய்யப்படுவதை ஊக்குவிக்க வேண்டும் என்றார்.

மேலும் நிலாவரை வற்றாக் கிணற்றைத் திருத்தி நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்துதல், கால்நடை வளர்ப்பு, விதைச் சேகரிப்பை ஊக்குவித்தல் ஆகியன தொடர்பாகவும் ஆராயப் பட்டது. (உ)

# காலபோக நெற்செய்கை முன்னேற்பாட்டுக் கூட்டம்

## முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன

(ஊர்காவற்றுறை)

காரை நகரில் காலபோக நெற்செய்கையினை மேற்கொள்வதற்கான முன்னேற்பாட்டுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், தொல்புரம் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்ற இம் முன்னேற்பாட்டுக் கூட்டத்தில்,

வயல்களைச்சுற்றிப் பொது வேலி போடுதல், வேலி அடைக்க கூலியாக பரப்புக்கு 25 ரூபா வீதம் விவசாயிகள், விவசாய சம்மேளனப் பொருளாளரிடம் செலுத்துதல், செப்ரெம்பர் முதலாம திகதிக்கும் 15ஆம் திகதிக்கும் இடையில் இவ் வேலையைப் பூர்த்தியாக்கல்,

கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை ஒக்ரோபர் தொடக்கத்தில் இருந்து அடுத்த ஆண்டு மே மாதம் வரை கட்டி வளர்த்தல்,

அவ்வாறு கட்டி வளர்க்கப் படாத கால்நடைகளைப் பிடித்து, உரிமை கோரப் படாதவிடத்து 4 நாட்களின் பின் பகிரங்க ஏலத்தில் விற்றல் ஆகிய முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (உ-75)

# சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று

[யாழ்ப்பாணம்]

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப்பேரவையினரால் தினமும் மு.ப. 10.00 மணிக்கு நடத்தப்படும் தெய்வீக நிகழ்ச்சிகளில் இன்று 'சிவபுண்ணியங்கள்' என்ற தலைப்பில் பிரமஸ்ரீ காரை கு. சிவராஜசர்மாவின் சொற்பொழிவு இடம் பெறும். (செ-52)

★ ★ ★

ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தலைவர்சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றி வரும்கந்தர் அநுபூதித் தொடரில் இன்று 'கரவாகிய கல்வி உளார் கடை சென்று இரவா வகை மெய்ப்பொருள் ஈகுவையோ' என்ற தலைப்பில் உரையாற்றுவார். (செ)

# கும்பாபிஷேக மலர் வெளியீடு

(மந்திகை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான மஹாகும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா இன்று மு.ப 10.30 மணிக்கு ஆலய புதிய வசந்தமண்டபத்தில்,

ஆலய அறங்காவல் சபையின் தலைவர் இ. அன்னலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மலர் அறிமுகவுரையை யாழ் பல்கலைக் கழக கலைத்துறை பேராசிரியர் சபா.ஜெயராசாவும்,

ஆய்வினை யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும் நிகழ்த்தவுள்ளனர். (உ-23,52)

## கடந்த 15 மாதங்களின் பின்
# பிஜியில் மீண்டும் பொதுத் தேர்தல்
## தீவிரவாதிகள் வாககளிக்கமுடியாது

(பிஜி)
கடந்த 15 மாதங்களின் பின் மீண்டும் பிஜித் தீவில் நாடாளுமன்றத்துக்கான தேர்தல் வாக்களிப்பு நேற்று ஆரம்பமாகியது.

முன்னாள் முதல்வர் மகேந்திரசௌத்திரி உட்பட பல பிரமுகர்கள் நேற்றுக் காலையில் தமது வாக்குகளை அளித்ததாகவும சுறுசுறுப்பாக வாக்களிப்பு இடம் பெற்றதாகவும் பிஜி செய்திகள் தெரிவித்தன.

71 இடங்களுக்கான இத் தேர்தலில் சுமார் 4 இலட்சத்து 51 ஆயிரம் பேர் வாக்களிக்கிறார்கள்.

பிஜி நாட்டவர்களுக்காக 23 ஆசனங்களும் இந்தியர்களுக்காக 19 ஆசனங்களும் ஏனையோர்களுக்கென மூன்று ஆசனங்களும் தீவு ஒன்றிற்கு ஒரு ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத் தேர்தலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கிளர்ச்சிக்காரர்கள வாக்களிக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

சிறு சிறு அசம்பாவிதங்கள் நடைபெற்ற போதும் கூட தேர்தல் அமைதியாக நடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தேர்தலை 60 வெளிநாட்டுப் பிரதிநிதிகள கண்காணிப்பது குறிப்பிடத்தக்கது. (க-து)

## இன விவகார மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை
### யூதமத போதகர் தெரிவிப்பு

(லண்டன்)
ஐக்கிய நாடுகள சபையினால் அடுத்த மாதம் இடம் பெறவுள்ள இன விவகார மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என பிரிட்டனின் யூத மத போதகரான யோன் அட்டன் செக்ஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியர் மீது சுமத்தப்படும் அவதூறான குற்றச்சாட்டுக்களை காரணம் காட்டியே அவர் இவ்வாறு கூறியுள்ளார் என ஐக்கிய நாடுகளின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த இன விவகார மாநாட்டில் புற்றுநோய் காரணமாக தன்னால் கலந்து கொள்ள முடியாது என கூறிய தென் ஆபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தற்போது கலந்து கொள்ள சம்மதித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது (க-07)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கிறீஸ் கைப்பற்றப்பட்டது

(புதுடில்லி)
இலங்கைக்குகடத்துவதற்கு தயாராக வைக்கப்பட்டிருந்த 115 டின்களில் அடைக்கப்பட்ட கிறீஸ் மற்றும் இதனை ஏற்றிவந்த வாகனம், இலங்கைக்கு கொண்டு செல்லத் தயாராக இருந்த படகு என்பவற்றை இராமநாதபுரம் சுங்க இலாகா பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

தங்கச்சி மடம்அருகேயுள்ள அரிய குண்டு கடற்கரைப் பகுதியிலேயே இக்கடத்தல் முறியடிக்கப் பட்டது

இதன் பெறுமதி 2 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-3)

## உக்ரைனின்
# 10 வது சுதந்திர தினம்
## நேற்று முன் தினம அனுஷ்டிப்பு
### ரஷ்ய அதிபரும் கலந்து கொண்டார்

(கியூ)
உக்கிரைனின் 10 வது சுதந்திர தின விழா நேற்று முன் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

300 வருடங்கள ரஷ்யாவின் ஆட்சியிலிருந்தும் 70 வருடங்கள சோவியத் குடியரசின் ஆட்சியில் இருந்தும விடுபட்ட உக்ரைனின் இந்த சுதந்திரதின விழாவில் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் பிரதம அதிகாரியாக கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

இவ் விழவில் ரஷ்யத் தயாரிப்புக்களான. பல தரப்பட்ட ஜெற் விமானங்கள, உலங்கு வானூர்திகள் வானில் நின்று பூமழை பொழிந்துள்ளதுடன் வான் சாகசங்கள் பல நிகழ்த்திக் காட்டியுள்ளன.

ரஷ்ய அதிபர் தனது சுதந்திர தினஉரையில் உக்ரைன் திடரெனதன்நாட்டுவளங்களைக் கொண்டு முன்னேறியது. ஏனைய நாடுகளிலும் பார்க்க ஒரு தனித்துவநாடு என்பதை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. அதற்கு ரஷ்ய அரசின் சார்பில் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இனி வரும் காலங்களிலும் உக்ரைனுக்கு எவ்விதத்திலும் உதவ ரஷ்யா தயாராகவுள்ளது எனவும் தெரிவித்தார் (க-7)

## எனது கைது தொடர்பாக மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கிறது
### கலைஞர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)
தன்னை அத்துமீறிக்கைது செய்ததுதொடர்பாகவும்பேரணியின்போதுநடந்தபொலிஸ் தாக்குதலகள் தொடர்பாகவும் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கிறது என்று கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்தார்

செய்தியாளர்களின் கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் இந்த இரு சம்பவங்கள் தொடர்பாகவும் மாநில அரசு விசாரணை ஆணைக்குழுவை நியமித்திருப்பதால் இவ்விடயத்தில் தான் ஒன்றும் கூறமுடியாதிருப்பதாக கலைஞர் கருணாநிதி தெரிவித்துளளார்.

இதேவேளை, பாரதியஜனதாக்கட்சிக்கும், தி. மு. க. விற்கும் எந்தவித கருத்து வேறுபாடுகளும் இல்லையென்றும் சிலசெய்தி ஊடகங்கள தவறானமுறையில் செய்திகளை வெளியிட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

கலைஞர் கருணாநிதி மீது நடைபெற்ற அத்துமீறல் சம்பவங்கள தொடர்பாக அமைச்சர் முரசொலி மாறன் பாராளுமன்றக் கூட்டத் தொடரிலிருந்து வெளிநடப்புச் செய்த சம்பவத்திற்கு வெகுஜன ஊடகங்களால் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-து)

## பொலிஸ ஆணையர் தொடர்ந்தும காவலில்

(மும்பை)
ஒன்பது பொலிஸாரைச் சுட்டுக் கொன்றதற்காக மும்பை உதவிப் பொலிஸ் ஆணையாளர் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மும்பை உதவி பொலிஸ் ஆணையர் ஆர்.கி தியாகின் இதய நோயால் பீடிக்கப்பட்டிருப்பதால் நீதிமன்ற விசாரணையில் கலந்து கொள்ளமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

1991ல் ஆர்.கி தியாகின் 17 பொலிஸாரை ஒரு கிராமத்துக்கு அழைத்துச் சென்று அவர்களில 9 பேரை சுட்டுக் கொல்லும்படி உத்தரவிட்டார் என்றகாரணத்துக்காக கைது செய்யப்பட்டார். (து)

## இடமாற்றம் இரத்து

(யாழ்ப்பாணம்)
தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் யாழ் பாண மாவட்ட அலுவலகத்தில் பணி புரிந்த சுமார் 45 ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த இடமாற்ற உத்தரவு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டை யடுத்து. இரத்துச் செய்யப் பட்டுளளது.

## வெடிப்பொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
அண்மையில் அரியாலை, சாவகச்சேரி மட்டுவில் தெற்கு. தனங்கிளப்பு. கோயிலாக்கண்டி போன்ற பகுதிகளில் மேற்கண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 60 நிலக் கண்ணி வெடிகளையும் கிளைமோர்க் குண்டொன்றையும் கைக்குண்டு ஒன்றையும் தாங்கி எதிர்ப்பு எறிகணை 22 யும் 130 மி. மீ ரக எறிகணை ஒன்றையும் 122 மி.மீ ரக எறிகணை ஒன்றையும் 81 ரக மோட்டார் குண்டு 28 யும் படையினர் கைப்பற்றியதாக விசேட ஊடக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ந-4)

## மரபணு சோதனைமூலம் இருதயச் சத்திர சிகிச்சை
### ஜேர்மனி மருத்துவர் சாதனை

(பேர்ளின்)
நோயாளியின் மரபணு சோதனை மூலம் சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக முடித்து சாதனையைநிலைநாட்டியுள்ளார் ஜேர்மனிய மருத்துவர் ஒருவர்.

கடந்த மார்ச் மாதம் 46 வயதான ஒருவர் கடுமையான மாரடைப்பிற்குள்ளாகி மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரின் முள்ளந்தண்டிலிருந்து எடுக்கப்பட்ட கலங்களைக்கொண்டு அவரதுபாதிக்கப்பட்ட இருதயத்தின் ஒரு பகுதி மீண்டும் இயங்கவைக்கப்பட்டுள்ளது

இச் சத்திர சிகிச்சை பத்து வாரகாலமாக மேற்கொள்ளப்பட்டது. தற்போது இவர் பூரண சுகமடைந்துள்ளார்.

ஜேர்மனியிலுள்ள 'தசில்ரொக்' பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மருத்துவர் ஒருவரே இச்சாதனையைப் புரிந்துள்ளார். (செ)

## கொலம்பியாவில் அடுத்தடுத்து குண்டுவெடிப்பு
# ஒருவர் பலி; 30 பேர்காயம்

(லண்டன்)
கொலம்பியாவில் அடுத்தடுத்து ஏற்பட்ட குண்டு வெடிப்புகளால் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

இங்கு ஏற்பட்ட கார்க் குண்டு வெடிப்பில் 10 பேர் காயமடைந்துள்ளனர் இதே வேளை தலைநகரிலிருந்து 60 மைல் தொலைவிலுள்ள நகர் ஒன்றில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்கு ஒருவர் பலியானார். 20 பேர் காயமடைந்துள்ளனர்.

இக் குண்டுவெடிப்புகளுக்கு தேசிய இராணுவ அமைப்பே காரணமென்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## மு. க. ஸ்டாலின் விவகாரம் விரைவில் விசாரிக்கப்படும்
### தமிழகமுதல்வர் தெரிவிப்பு

(சென்னை)
தமிழக முதல்வராக செல்வி ஜெயலலிதா பதவியேற்ற பொழுது மு.க. ஸ்ராலினுக்கு அழைப்பு அனுப்பப்படாததை யிட்டு விசாரிக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

சட்டப்பேரவை விவாதத்தின் போது பேசிய முதல்வர் ஜெயலலிதா; ஆட்சியினர் வரம்பை மீறிச் செயற் படுவதாக தி. மு க வினர் குற்றம் சாட்டுவதாகத்தெரிவித்தார்.

மு. க. ஸ்டாலின் தமக்கு. முதல்வர் ஜெயலலிதா தமது பதவியேற்புக்குறித்துஅழைப்பு அனுப்பவில்லை என சட்ட சபையில் தெரிவித்ததை அடுத்தே தமிழக முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க-து)

## நடைமுறை விதிகள் அமைப்புக் கூட்டம்

(புதுடில்லி)
இந்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி அங்கத்தவர்களுக்கான நடை முறை விதிகள் அமைக்கும் குழுக்கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

ஜோர்ச் பெர்னாண்டர்ஸ் தலைமையிலான நாலு பேர் கொண்ட குழு இந்த நடைமுறை விதிகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது

அண்மையில் சிவசேனாக் கட்சி உறுப்பினர் ஒருவர் யூ ரி. ஐ நிதிநிறுவனத்தின் ஊழல் பற்றியும் யூ.ரி.ஐ. க்கிற்கும் பிரதமர் அலுவலகத்திற்கும், தொடர்புகள இருக்கும் என்று மாநிலங்கள் அவையில் சுட்டிக் காட்டி வாஜ்பாய் பதவிவிலக முயற்சித்ததும் அறிந்ததே,

தேசிய ஜனநாயக கூட்டணியில் ஓர் அங்கமான சிவசேனாக்கட்சியின் இந் நடவடிக்கையை அடுத்தே அங்கத்தவர்களுக்கு நடை முறை விதிகள் அமைப்பது என்று முடிவு ஏற்பட்டது. (து)

## உருளைகள் வழங்கப்படாமையால் ஒழுங்கைகள் திருத்துவதில்
# தாமதம் ஏற்படுகிறது
### வலி. கிழ. பிரதேச செயலர்

(யாழ்ப்பாணம்)
நீர்வேலி மடத்தடி பிரதான ஒழுங்கை உட்பட வலி. கிழக்குபிரதேசசபைக்குட்பட பல்வேறு ஒழுங்கைகள் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும், அதற்குத் தேவையான உருளையை சம்பந்தப்பட்ட திணைக்களம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதால் மேற்படி திருத்தவேலைகளைச் செய்ய முடியாதுள்ளதாக வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் செ. குகதாசன் தெரிவித்துள்ளார்.

மேற்படி திருத்தத்திற்கென கற்கள், ஊரிமணல் முதலியன பறிக்கப்பட்டு நீண்டகாலமாகியும் கவனிப்பாரற்ற நிலையில் அப்பகுதி மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவது குறித்து 'வலம்புரி' பத்திரிகை ஏற்கனவே செய்திவெளியிட்டமை தெரிந்ததே.

வரலாற்றுப் புகழ் பெற்ற நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயவருடாந்த மகோற்சவம் இப்போது ஆரம்பமாகியுள்ளதால் அப்பகுதியில் ஒழுங்கை திருத்தத்திற்கென கற்கள் பறிக்கப்பட்டுள்ளமை தேர் உற்சவத்தின் போது பலத்த சிரமங்களை ஏற்படுத்தக் கூடுமென அடியார் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

## நஷ்டஈடு

(மந்திகை)
கடந்த 1995 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டில் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட சிறிய வர்த்தகர்கள் 250 பேருக்கு நஷ்டஈடு வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணங்கியுள்ளார். [உ-23]

நிலையில் திரியாது அடங்கி
யான் தோற்றம் மலையினும்
மாணப் பெரிது.
- குறள்

## வலம்புரி

### ஏன் இந்தப் பாகுபாடு?

வடபுலத்தில் நடந்த யுத்த அனர்த்தத்தில் பெரும் அழிவைச் சந்தித்த பிரதேசங்களில் தீவகம் முதலிடம் பெறும். 1990 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையூடாக மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையை அடுத்து, தீவக மக்கள் தமது சொந்த மண்ணை - வளத்தை விட்டு வெளியேறினர். அவர்களுக்கு அகதிப் பட்டம் வழங்கி பதினொரு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது.

இராணுவ நடவடிக்கையால பேரழிவைத் தீவகம் ஒட்டு மொத்தமாக அனுபவித்த போதிலும், மண்டைதீவு மக்கள் தாங்கிக் கொண்ட பேரழிவு கணக்கிட முடியாதது.

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி மண்டை தீவைக் கைப்பற்றிய இராணுவத்தினர் சிறுவர், இளைஞர், முதியவர் என்ற வயது வேறுபாடின்றி 71 பேரை சுட்டுத் தள்ளினர். இதன் போது 48 போராளிகளும் ஒரே நாளில் உயிர் துறந்தனர். கோட்டையைக் கைப்பற்ற வந்தவர்களின் நாச காரத்தால் எழில் மிகு மண்டைதீவுக் கிராமம் யானைகள் புகுந்த வாழைத் தோட்டமாகக காட்சி கொடுத்தது. என் செய்வது, ஒன்றை இழந்தே இன்னொன்றைப் பெற வேண்டும் என்ற தேற்றத்தின்படி, மண்டைதீவுமக்கள் தமது மண்ணை, சொத்தை- கூடவே நிம்மதியையும்இழந்தனர்.

போனால் போகட்டும் போடா என்ற வரிகள் ஆற்றுப் படுத்தினும், தொடர்ந்தும் மணடைதீவு மக்களுககு இழைககப்படும் அநியாயங்களை எண்ணும் போதுநெஞ்சம் பொறுக்கவில்லை.

பரம பிதா காட்டிய பாதை

# பொலிவிழந்து போயுள்ள யாழ். மாவட்டத்தில் இறைபணி செய்தற்கு அர்ப்பணிப்பு அவசியம்



நிர்வாக அலுவலகங்கள் சமூகத் தொண்டு நிறுவனங்கள் ஆன்மீகக் கட்டமைப்புகள் எதுவானாலும் அவை தமது பணிகளை நிறைவாக ஆற்றுவதற்கு துணையாக கைகொடுப்பது அவற்றின் பணியாளர்களின் எண்ணிக்கையும் திறமையும் தியாக உணர்வுமாகும். இது எமது கத்தோலிக்க திருச்சபைக்கும் சாலப் பொருந்தும்.

### இறைபணியாளர்கள் அவசியம்

யாழ். மறைமாவட்டம் தற்போது நோக்கியுள்ள சமய, சமூக, மனிதமேம்பாட்டுப் பின்னடைவுகளை சீர்செய்து ஆன்மீகப் பாதையில்மக்களை வளம்படுத்த நிறைய இறை பணியாளர்கள் குருத்துவ வாழ்வில் தம்மை இணைததுக் கொள்ள வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளது. எமது ஆன்மீகத் தேடல்களை, தேவைகளை தாமே நிறைவாக்க மறைமாவட்டக் குருக்களை அதிகரிக்க வேண்டும்.

இன்றைய கத்தோலிக்க இளைஞர், யுவதிகள் இறை வழி விலகி பல்வேறு உலக மாயைகளின் பின்னே இழுபட்டுச் செல்கின்றனர். இவர்களுக்குள் விழிப்புணர்வை விதைத்து, 'என்பின்னே வா, என்ற யேசுவின் அழைத்தலை உணர்த்தி மறைமாவட்டக் குருக்களின் அணியில் இணைத்து இறை, மனிதப் பணிபுரிய அழைத்து நிற்கின்றனர். மறை மாவட்டக் குருக்களை உருவாக்கும் செய்யும் புனித மடுத்தீனார் குருமட நிறுவனத்தினர்.

**எஸ். யேசுதாஸ்**

இதன் முதற்கட்ட செயற்பாடாக தேவ அழைத்தல் இயக்குனர் அருள் திரு ஏ லோறன்ஸ் உப அதிபர் அருள்திரு.எஸ்.ஏ.றொஷான் ஆகியோர் குருமட மாணவர்களுடன் இணைந்து பல்வேறு அமைப்பின் செய்திகளை மக்கள் மனங்களில் தூவும் முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

### அழைப்பின் குரலுக்கு அர்ப்பணிப்பு

கடந்த 19-08-2001ஞாயிற்றுக்கிழமை பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலியுடன் இணைந்த பல நிகழ்வுகள் இடப் பெற்றன. அன்றைய திருப்பலி தேவ அழைத்தல பற்றிய சிறப்பான செய்திகளைப் பறைசாற்றியது. அருள்திரு லோறன்ஸ், றொஷான் அடிகளின் விவாத மறையுரை வழியாக அமைப்பின் சிறப்பும், எமது பொறுப்பும், கடமையும் தொடர்பான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.

சில பங்குகளில் பல குருக்கள், கன்னியர் சில ஆயர்கள் கூட உருவாகியுள்ளனர். பல பங்குகளில் ஓரிருவர் மட்டும் துறவறத்திலுள்ளனர். இந் நிலை மாறவேண்டும். வீட்டுக்கொருவர் அழைப்பின் குரலுக்குத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அது ஒவ்வொரு கத்தோலிக்கரது கடமையாகும் என அருள்திரு சாள்ஸ் கொலின் அடிகள திருப்பலி நிறைவில் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து புனித மடுத்தீனார் குருமட மாணவர்களால் திருவாளர் ஜோன்சன் அவர்களால் நெறியாளகை செய்யப்பட்ட வீதி நாடகம் ஒன்று நடித்துக் காட்டப்பட்டது. அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு, திராட்சைத் தோட்டத்தில் பணிபுரிய என்னோடு சேருங்கள், நான் உங்களை மனிதரைப் பிடிப்போர் ஆக்குவேன் என்ற யேசுவின் அழைப்பின் தொனிப் பொருளில் சமகால நிகழ்வுகளையும், உள்ளடக்கி இந் நாடகம் இடம்பெற்றது. அனைவரையும் உள்ளத்தின் ஆழத்தில் தட்டி எழுப்பும் பயன்மிக்க நிகழ்வாக அமைந்திருந்தது. இறுதியாக குருமட மாணவரின் ஒருநாள் வாழ்வுச் சக்கரம் எவ்வாறு அமையும் என்பதை வீடியோப்படக் காட்சி மூலம் எடுத்துக் காட்டப்பட்டது.

தேவ அழைத்தலுக்கு உந்து சக்தி ஊட்டும் இத்தொடர் யாழ்குடாநாட்டின் பங்குகள் தோறும் நடத்தப்படவுள்ளதாக இயக்குநர் தெரிவித்தார்.

போரின் கொடுமைகளால் துவண்டு, பொலிவிழந்து நிற்கும் யாழ்மறைமாவட்டத்தில் கத்தோலிக்க குருவாகப் பணிபுரிய நீ ஆயத்தமா?

நொந்து போன மக்களை ஆறுதல்படுத்த என் வார்த்தைகளை அவர்களுக்கு வழங்க என் உயிருள்ள உணவை அவர்களுக்குப் பரிமாற என் ஆசீரினால் அவர்களை நிரப்பும் உன்னத தியாகப் பணிக்கு நீ எனக்குத் தேவை நீ வருகிறாயா?

நீ பிறக்கு முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன், மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன், எனவே என் பின்னே வா. உன்னை மனிதரைப் பிடிப்போனாக்குவேன்; இது எமது நித்திய குருவாகிய இயேசுவின் அழைப்பு.

தேவ அழைத்தல் பெருகவும், இறைபணி ஓங்கவும் இறைநாமம் மகிமை பெறவும் இடைவிடாது செபிப்போம். துறவறத்தில் கை கோர்ப்போம். □

சோதிடபலன்

# விஷு புத்தாண்டில் இராசி மாறும் கிரகங்கள் தருகின்ற பலன்கள் நல்லவையா? தீயவையா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

**மகரராசி (உத்தராடம் 2,3,4 திருவோணம் அவிட்டம் 1, 2)**

மகரராசி அன்பர்களுக்கு குரு பகவான் வருட ஆரம்பத்தில் 5 ஆம்இடமாகவும், ஜூன்13ல் இருந்து 6 ஆம் இடத்திலும் இருப்பார். சனீஸ்வரன் ஏப்ரல் 11 வரை 4 ஆம் இடம் பின்னர் 5 ஆம் இடத்துக்கும் மாறிப் பலன செய்வர்

ஜூன் 13ல் இருந்து 6ல் குருவினால், தேகசுகம் குறையும்,

திரர் நன்மை தோன்றும். புத்திரர்கள கல்வி, தேர்வு, நன்மை அடைவர். தாய் சுகக் குறைவும், தகப்பனுக்குத் தொழில் முயற்சியில் அலைச்சல், இடமாற்றம், நிம்மதிக் குறைவு இருந்து வரும். சில போது தொழில் வருமான இலாபம் அமையும். கடன் பிரச்சினை சமாளிக்கலாம். ரோகம் தோன்றினாலும் விரைவில் குணமாகிவிடும். சிலருக்கு அரச தொழில்,

போது தோன்றும், ஏப்ரல் 11 ல் இருந்து சனியினால மனக் கிலேசம், தப்பெண்ணங்கள் சுகக் குறைவு, உணவு நன்மை குறைதல் போன்றவை அமையும். குடும்பத்தில் சில போது சச்சரவுகள் தோன்றும். புத்திரர்கள் நன்மையாக நடக்கமாட்டார்கள். அவர்களுக்கு கல்விப் பிரச்சினை தொழில் சிக்கல் தோன்றும். குடும்பத்தவரு

**மற்றக் கிரகங்கள் பலன் 2001 புரட்டாதி வரை**

பகைமை தீரல், புகழ், மதிப்பு, விவசாய லாபம், பெண்களால்துன்பம், அலைச்சல், அதிகபிரயாசம், குடும்பம் புத்திரர்களால சில போது கஷ்டம், செலவுகள், இடமாற்றம், கடன் பிரச்சினை, அதிர்ஷ்ட பணவரவு போன்றவை அமையும்.

**2001 ஐப்பசி 2002 சித்திரை**

[illegible] வாழைத் தோட்டமாகக காட்சி கொடுத்தது. என் செய்வது, ஒன்றை இழந்தே இன்னொன்றைப் பெற வேண்டும் என்ற தேற்றத்தின்படி, மண்டைதீவுமக்கள் தமது மண்ணை, சொத்தை- கூடவே நிம்மதியையும்இழந்தனர்.

போனால் போகட்டும் போடாஎன்ற வரிகள்ஆற்றுப் படுத்தினும், தொடர்ந்தும் மணடைதீவு மக்களுககு இழைககபடும் அநியாயங் களை எண்ணும் போதுநெஞ்சம் பொறுக்கவில்லை.

1996 ஆம ஆண்டுமீண்டும் யாழ்ப்பாணத்தில் மக்கள் குடியேறிய பின்னர், தீவகப் பகுதிகளுக்கு மக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். ஆனால் மண்டைதீவுக்கு எவரும் செல்லமுடியாது. மண்டைதீவில் பிறந்து வளர்ந்த ஒருவர் அங்கு செல்வதாயின் 'பாஸ்' எடுக்க வேண்டும்.

இப்போது அங்குள்ள பிள்ளையார் ஆலயத்தில் திருவிழா நடைபெறுகிறது. எனினும் தரிசிக்க எவரும் செல்ல முடியாது. எப்படியிருக்கிறது ஜனநாயகம்?.

கடற்படையினரின் இம் மனித உரிமை மீறலை பாராளுமன்றத்தில் எழுந்தருளும் எமது எம்.பி.களுக்கோ, அரச சார் பற்ற நிறுவனங்களுக்கோ, சிவில் நிர்வாகம் நடத்தும் படைப் பொறுப்பதிகாரிகளுக்கோ தெரியாது போனது ஏன்?.

---

# விஷு புத்தாண்டில் இராசி மாறும் கிரகங்கள் தருகின்ற பலன்கள் நல்லவையா? தீயவையா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

**மகரராசி (உத்தராடம் 2,3,4 திருவோணம் அவிட்டம் 1, 2)**

மகரராசி அன்பர்களுக்கு குரு பகவான் வருட ஆரம்பத்தில் 5 ஆம்இடமாகவும், ஜூன்13ல் இருந்து 6 ஆம் இடத்திலும் இருப்பார். சனீஸ்வரன் ஏப்ரல் 11 வரை 4 ஆம் இடம் பின்னர் 5 ஆம் இடத்துக்கும் மாறிப் பலன செய்வர்

ஜூன் 13ல் இருந்து 6ல் குருவினால், தேகசுகம் குறையும். சிலபோது பகைமை, மனக் குழப்பம இருந்து அகலும். உணவு நன்மை உள்ளது. காதல் நட்பு உறவினர் ஆதரவு விஷயங்களில் நன்மை குறையும். தொழில் முயற்சிகள் அதிக பிரயாசத்துடன் நன்மை தரவுள்ளன. சிலருக்கு விவாக நன்மை உள்ளது. புத்திரர் நன்மை தோன்றும். புத்திரர்கள கல்வி. தேர்வு. நன்மை அடைவர். தாய் சுகக் குறைவும், தகப்பனுக்குத் தொழில் முயற்சியில் அலைச்சல், இடமாற்றம, நிம்மதிக் குறைவு இருந்து வரும். சில போது தொழில் வருமான இலாபம் அமையும். கடன் பிரச்சினை சமாளிக்கலாம். ரோகம் தோன்றினாலும் விரைவில் குணமாகிவிடும். சிலருக்கு அரச தொழில், வேறு தொழில் லாபம் கிடைக்கும். பயண விஷயங்கள் அலைச்சல் தரும. பெண்பாலர் ஆதரவு குறைவாக விளங்கும்.

**சனீஸ்வரன் பலன்**

4 ல் சனி வாகனசுகக் குறைவு, நஷ்டங்கள் தேகசுகக் குறைவு, குடும்பச் சிக்கல் சில போது தோன்றும், ஏப்ரல் 11 ல் இருந்து சனியினால மனக் கிலேசம், தப்பெண்ணங்கள் சுகக் குறைவு, உணவு நன்மை குறைதல் போன்றவை அமையும். குடும்பத்தில் சில போது சச்சரவுகள் தோன்றும். புத்திரர்கள் நன்மையாக நடக்கமாட்டார்கள். அவர்களுக்கு கல்விப் பிரச்சினை தொழில் சிக்கல் தோன்றும். குடும்பத்தவருடன் முரண்பாடு தோன்றி அகலும். வாகன சுகம்இராது. வாகனக் கோளவனவால் நஷ்டம் வரும். சிலருக்கு செலவுடன் பிரயாணம் வரவுள்ளது. நித்திரை சுகம், ஓய்வு நன்மைதலடைப்படும். அலைச்சல, சிலபோது சளி, இருமல் ரோகம் அலமந்து குணமாகும. கடன் மீளாது. விவாகவிஷயம் தடையுடன் தாமதமாகும். வழக்கு விவகாரம் தாமதமாகி வரும். சிலருக்கு குறுக்குவழி, கள்ளச் சந்தை வியாபார வருமான லாபம் சில சமயம் கிடைக்கும்.

**ராகு கேது பலன்**

6ல் ராகுவினால் வழக்கு வெற்றி சத்துருலாபம், வயிறு குடல், ரோகம் வாகன நட்டம் வரும் 12ல் கேதுவால் யாத்திரை [illegible]ஷயம் தோன்றும். நித்திரை சுகம் குறையும். தெய்வ எண்ணம் சோம்பல் நிலவிவரும். 2002ல் ராகுவால் தொழில் லாபம், குடும்பச் சிக்கல், கேதுவால் அதிர்ஷ்டம், பிரயாண லாபம், பணவிருத்திதோன்றவுள்ளன.

---

சோதிடஞானி

## சண். மாஸ்டர்

---

**மற்றக் கிரகங்கள் பலன் 2001 புரட்டாதி வரை**

பகைமை தீரல், புகழ், மதிப்பு, விவசாய லாபம, பெண்களால்துன்பம், அலைச்சல், அதிகபிரயாசம், குடும்பம் புத்திரர்களால சில போது கஷ்டம், செலவுகள், இடமாற்றம், கடன் பிரச்சினை, அதிர்ஷ்ட பணவரவு போன்றவை அமையும்.

**2001 ஐப்பசி 2002 சித்திரை வரை**

பணவிருத்தி, முயற்சிகளில் வெற்றி லாபம், உணவு ஓய்வு சுகம, சிறந்த ஆதரவு, குடும்ப மகிழ்ச்சி, அரச நன்மை, பூமியால் வருமானம ஆகியவை விளங்கும். மத்திம சுகம், மந்தநிலை (மார்கழி) பல வழி லாபம், பொருள் சேரல், தொழில் நன்மை, தெய்வ லாபம, கல்வி நன்மை குறைதல், செலவுகள் புதிய ஸ்தானம் பணவரவு நன்மைகள் தோன்றும்.

**உத்தியோகத்தர்களுக்கு**

ஜூன்வரைதொழில்நன்மை, பதவி லாபம், பின்னர் இடமாற்றம் தொழில் சிக்கல் வரும்.

**வியாபாரிகளுக்கு**

ஜூன் வரை வியாபாரத்தில் நலல விருத்தியுள்ளது. பின்னர் அதிக முயற்சியமைந்து தொழில் நன்மை கிடைக்கும்.

**மாணவர்களுக்கு**

தற்காலத்தில் கல்வி, தேர்வு நன்மை உள்ளது. ஜூனிலிருந்து கல்வி முயற்சிகளில் தடைகள் நிலவிவரும்.

**இளைஞர் யுவதிகளுக்கு**

தற்காலம் தொழில் வருமான முயற்சிகளால நன்மை, விவாக நன்மை லாபம் தோன்

→ 2ஆம் பக்கம் பார்க்க

---

## தினசரி தியானம்

## மருந்து

முன்னை வினையிரண்டும்
வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும்
பேராளன்-தென்னன்
பெருந்துறையில் மேய
பெருங்கருணையாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து.

**- மாணிக்கவாசகர் -**

ஆருயிர் மயமாகிய அருமருந்தே, யானுனைப் புசித்துப் பிறவிப் பெருநோயைப் போக்குவேனாக.

நோயின் வேகத்தைத் தடுக்கவல்லது மருந்து. பிறகு நோயைப் போக்கவல்லதும் மருந்து, பண்பட்ட மனதே மருந்துகளுள் மேலானது, அந்த மனத்தைத் தெய்வத்துக்கு உரியதாக்கி விட்டால் மனிதன் கேடில்லாதவனாகி விடுகிறான்.

**ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.**

# ரயர்களை அடுக்கி எமது உறுப்பினர்களை எரித்துக் கொன்றவர்கள் ஐ.தே.கட்சியினர்

## பிரசாரக் கூட்டத்தில் ஜே.வி.பி உறுப்பினர் சீற்றம்

[கொழும்பு]

1982ம் ஆண்டு ஐக்கியதேசியக்கட்சியினால் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பின் பின்னர் அக்கட்சிதேர்தலுக்கான திட்டத்தை ஓரங்கட்டிவிட்டு ரயர்களைஅடுக்கி அதன்மீது மனித உடல்களை போட்டு எரித்து ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்தது அந்த ஐக்கியதேசியக்கட்சியைமீண்டும்ஆட்சியில் அமர நாம்ஒருபோதும் ஆதரவுவழங்கமாட்டோம் என்று மேல் மாகாணசபையின் ஜே.வி.பி உறுப்பினர் எஸ். அமரசிங்க பிரசாரக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியினரின் பிரசாரக்கூட்டமொன்று மீரிகமவில் நடைபெற்றது.

இப்பிரசாரக் கூட்டத்தில் எஸ். அமரசிங்க மேலும் பேசுகையில் கூறியதாவது.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு சில நிபந்தனைகளுடன்பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்குஆதரவு அளித்து ஒருவருடகால தகுதிகாண் அரசு அமைக்க ஆலோசனை வழங்கியுள்ளோம்.

ஜனநாயகத்தைக் குழிதோண்டிப்புதைத்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இன்று உலகிலேயே தான்தான் சிறந்த ஜனநாயகவாதி என்று காட்டிக்கொள்கிறார்.

எமது கட்சியின் உறுப்பினர்களையும், பெற்றோர்களையும் அநியாயமாக எரித்துக் கொன்றார்கள் ஆனால் ஜே.வி.பியை அழிக்க முடியவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதியாக வர விருப்பம் இருந்தால் அவர்களே அதனை நிறைவேற்ற வேண்டும். ஜே.வி.பி எந்தச் சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவு அளித்து ஆட்சிப் பீடமேற்றமாட்டாது. இதனை நாம் செய்தால் எம்மை ஆதரித்த 5 இலட்சம் மக்களுக்கு துரோகம் செய்தவர்களாவோம் என்றும் கூறினார்.

இக் கூட்டத்தில கீர்த்தி தேரர், குமுதுனி பிரியந்தி, களனிபல்கலைக்கழகசிரேஷ்ட விரிவுரையாளர்கள, சந்த அபேவங்க ஆகியோரும் உரையாற்றினார்கள். (வ)

## டை பாவிப்போருக்கு புற்று நோய் அபாயம்

### விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

நரைத்த தலைமுடியை கறுப்பாக மாற்றுவதற்கு டை பாவிப்பவர்களுக்கு புற்று நோய்பிடிக்கும் அபாயம் ஏற்படுமெனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது

கறுப்பு டை தயாரிப்பதற்கு இரசாயன திரவங்கள் பயன்படுத்தப் படுவதால அது புற்று நோயை ஏற்படுத்தும் எனவும் எனவே இது தொடர்பான ஆய்வுகளை ஐரோப்பிய யூனியன் நாடுகளில் மேற்கொள்ளுமாறும் விஞ்ஞானிகள சுகாதார அதிகாரிகளைக கேட்டுள்ளனர். (வ)

## 2வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கு வெற்றி

(கொழும்பு)

கண்டிஅஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்ற இலங்கை இந்திய அணிகளுக்கிடையிலான 2வது டெஸ்ட போட்டியின் நான்காவது நாளான நேற்று இந்திய அணி இலங்கையணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியீட்டி உள்ளது.

கடந்த புதன்கிழமை ஆரம்பமான இவ்டெஸ்ட் போட்டியில் இலங்கையணிமுதலாவது இனிங்சில் 274 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்கில் 221 ஓட்டங்களையும் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் இனிங்சில் 221 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் 264 ஓட்டங்களையும் பெற்று வெற்றியீட்டியது.

இதில் இந்திய அணித்தலைவர் கங்குலி இரண்டாவது இனிங்சில் ஆட்டமிழக்காமல் தொண்ணூற்றெட்டு ஓட்டங்களைப் பெற்றமைகுறிப்பிடத்தக்கது. [ந-4]

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும் விஷேசமாக தயாரிக்கப்பட்டது.

சுத்தமான

**வி.எஸ்.பி, நல்லெண்ணெய்**

தயாரிப்பாளரும் ஏகவிநியோகஸ்தரும்

பரிமளா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி, யாழ்பாணம்.

(கி-1986)

## நூல் வெளியீட்டு விழா

அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை

அவர்கள் எழுதிய

### பத்திரிகைகளுக்கோர் அறிமுகம்

வெளியீடு: இன்று காலை 11 மணி

இடம்: : பாதுகாவலன் பணிமனை

கருத்துரை: திரு ந. வித்தியாதரன் (உதயன் இணை ஆசிரியர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சி. சி. கொலிந்திரன்
செயலர்

பாதுகாவலன் பத்திரிகையாளர் சங்கம்

## இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு புலிகளுடன் பேசவேண்டும்

### வர்த்தக சம்மேளனத் தலைவர்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளுடன் பேசாமல் எந்தவிதமான தீர்வும்காணமுடியாது. எனவே அரசாங்கம் உடனடியாக விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும். இவ்வாறு தேசிய வர்த்தக சம்மேளனத் தலைவரும் சிலிங்கோ காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தலைவருமான எஸ். கொத்தலாவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாளை திங்கட்கிழமை கூட்டவுள்ள வர்த்தக சம்மேளனக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளது. காணாமல் போனோர், படையினர் பாதுகாவலர்கள் சங்கம் மற்றும் தொண்டர் நிறுவனங்களுடன்சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதுதொடர்பாக வர்த்தக சம்மேளனம் ஆராயவுள்ளது என்றும் கொத்தலாவலை மேலும் தெரிவித்துள்ளார். [வ]

### உதைபந்தாட்டம்

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் தெல்லிப்பழை நாமகள்விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் நவாலி அட்டகிரி விளையாட்டுமைதானத்தில் இடம்பெறும்இன்றைய உதைபந்தாட்ட போட்டியில் அளவெட்டி கலைவாணி விளையாட்டு கழகஅணிக்கெதிராக ஊரெழு பாரதிவிளையாட்டு கழகஅணி மோதவுள்ளது

இன்று பிற்பகல் இவ்வாட்டம்இடம் பெறவுள்ளது -வ4

### போரில்

பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்டது தொடக்கம் இன்றுவரை தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றி வருவதே சிங்கள தலைமைகளின் வழக்கம். இதிலிருந்து தென்னிலங்கை கட்சிகள் எதுவும் மாறிவிடவில்லை. ஆனால் ஜனநாயகப் போர்வையில் பாராளுமன்றப் பதவிகளை பெற்றுக்கொண்டிருப்பவர்கள் சிங்கள பேரினவாதத்தின் கபட நாடகங்களுக்கு துணைபோகின்றனர் அபிவிருத்தி செய்யப்போவதாகக் கூறி போராட்டத்தை அடகு வைக்கின்றனர். ஜனநாயகத்தை பாதுகாப்பது என்று சொல்லி பேரினவாதிகளுடன் கைகோர்க்கின்றனர்.

ஆனால்பாராளுமன்றஉறுப்பினர்களாகப் பதவி வகித்த கூட்டணியினரும் ஈரோசும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தமது பதவிகளை விட்டொதுங்கியதால் போர்வீறு பெற்றதுகண்கூடு. அன்றையநிலைமைகளோடு ஒப்பிடும்போது மிகமோசமான இன்றையசூழலில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவதே போராட்டத்துக் கானபங்களிப் பாகும். போராட்டம்தனக்கான நியாயங்களைத் தானே வாதாடிக் கொள்ளும். போரில் ஈடுபட்டிருப்பவர்களுக்காகவாதாட யாரும் பாராளுமன்றம் செல்ல வேண்டியது அவசியமில்லை.

தன்மானமும் இன உணர்ச்சியும்கொண்டவர்கள் வாழும்வரை போர் நீடிப்பதை எவரும் தடுத்து நிறுத்திவிட முடியாதுகடைசிப் போராளி இருக்கும் வரைபோராட்டம் ஓயப் போவதில்லை எந்த அடக்குமுறைச் சட்டங்களாலும்இன உரிமைப் போரை அடக்கிவிடமுடியாது.

எனவே ஜனநாயக அரசியல்நீரோட்டம் என்பதன் பெயரால்பாராளு மன்றநாற்காலிகளை பெற்றுக் கொண்டிருப்பவர்கள் தத்தம் பதவிகளை தூக்கி எறிந்து விடுதலைப் போரிற்கு ஊக்கம் கொடுக்கவேண்டும்.

சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைக்கு துணைபோகும் செயல்களை நிறுத்த வேண்டும வீரம் செறிந்த விடுதலைப் போருக்கு உத்வேகம் ஊட்டமுன்வரவேண்டும் இந்த அறிக்கையை புறக்கணிப்பதால் ஏற்படும் பின்விளைவுகளால் கவலைப்படுவதற்கும் கூட உங்களுக்குஅவகாசம் இருக்காது என்பதையும் சுட்டிககாட்டுகின்றோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சங்கிலியன் படை வெளியிட்ட இத்துண்டுப் பிரசுரம் பற்றிய செய்தி நேற்றைய புலிகளின் குரல் வானொலியிலும் ஒலிபரப்பாகியமை குறிப்பிடத் தக்கது. (ந)

### முயற்சிக்கு

இலங்கையின் இனட் பிரச்சினைவிடயத்தில் இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர் வொன்றை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் ஏற்படுத்தவேண்டுமென்று அவுஸ்திரேலியா வலியுறுத்துவதாகவும், நோர்வேயின் சமாதான முயற்சிகளை இருதரப்பும் ஏற்றுக் கொள்வதால் அதன் மூலம இருதரப்பும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை அவுஸ்திரேலியாஆதரிக்கும்என்றும் அவர் கூறியுள்ளார். (வ)

## பிரசவத்தில் இளம் ஆசிரியை மரணம்

[யாழ்ப்பாணம்]

பிரசவத்திற்காக யாழ் போதனாவைத்தியசாலையில அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் மரணமாகியுள்ளார்.

சுதுமலை தெற்கைச்சேர்ந்த ஆசிரியையான தர்மகுலசிங்கம் விமலலோகினி (வயது 34) என்ற இளம் பெண்ணே மரணமானவராவார்.

மரணவிசாரணைகளை மல்லாகம் மாவட்ட நீதவான் பா.சுப்பிரமணியம் மேற்கொண்டார். (ந-104, 8)

பொ.ஐ.ஐ. ஒன்றினையும் விடுத்துள்ளனர்.

இக்கூட்டறிக்கையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் தொடரை 27ம் திகதிதிங்கட்கிழமையும், 28ம் திகதிசெவ்வாய்க்கிழமையும் நடத்துவதெனத்தீர்மானித்துள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### ஜே-வி-பியுடன்

யகக்கா, ஆகியோரும், ஜே.வி.பியின் சார்பில் அதன் பிரச்சாரச் செயலர்விமல்வீரவன்ச பொதுச்செயலாளர் டில்வின் சில்வா நந்தனகுணதிலக ஆகியோர் கலந்து கொண்டனர்.

சர்வஜன வாக் கெடுப்பை ரத்துச்செய்தல், 5 ஆணைக் குழுக்களை நியமித்தல், பாராளுமன்றத்தைக் கூட்டுதல், அமைச்சர்களின்எண்ணிக்கையை குறைத்தல், நிறைவேற்று அதிகாரம கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல் போன்ற நிபந்தனைகள் தொடர்பாகபேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட்டது.

அரசாங்கத்திற்கும், ஜே.வி.பிக்கும் நேற்று மாலை ஆறு மணிக்கு ஆரம்பமான பேச்சுவார்த்தை நள்ளிரவு வரை நீடித்ததாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

ஜே.வி.பியுடனான பேச்சுவார்த்தையில அரசாங்கம்சில நிபந்தனைகளுக்கு இணங்காம என ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஜே.வி.பியினால் முன்வைக்கப்பட்ட அமைச்சர்களின் எண்ணிக்கைகளைக் குறைப்பது தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா சிரேஷ்ட அமைச்சருடன்பேசி அமைச்சர்களின் எண்ணிக்கையை 44ல் இருந்து 30 ஆக்கவும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையை கணிசமாகக் குறைப்பதுதொடர்பாகவும் ஜனாதிபதி தீவிரமாக ஆராய்ந்துவருகிறார்.

பாராளுமன்றத்தை செப்ரெம்பர் 7 ம திகதி கூட்டுவதாகவும் சர்வஜன வாக்கெடுப்பை ஒத்திவைப்பதாகவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்நிலையில் ஐக்கியதேசியக்கட்சி தேசிய நல்லிணக்க அரசை அமைக்கப்போவதாக கூறிவருவதில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் ஜே.வி.பியுடன் இணைந்து ஒருவருடத் தகுதிகான் அரசு அமைப்பதற்கு கூடிய சாத்தியங்கள் தென்படுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். [வ]

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.